# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.    1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது    Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு வைகாசிமாதம் 22-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 19-ம் இலக்கம்


## காங்கேசன்துறையில் உணவுக்கப்பல்

ஹிசகாலாமாறு என்ற ஜப்பானிய கப்பல் 99,000 மூடை அரிசியுடன் 6,358 மூடைகருவாடு, மிளகாய்ஆதியாம் பிறஉணவுப்பொருட்களையுங் கொண்டு சென்றவியாழக்கிழமை காங்கேசன்துறைவந்து சேரலாயிற்று. கொழும்புத் துறைமுகத்தில் இடநெருக்கடிகாரணமாகப் பதின்மூன்று தினங்களாகத் துறைமுகத்துக்கு வெளியே காத்துநின்ற இந்தக்கப்பல் காங்கேசன்துறைக்கு அனுப்பிவைக்கப்படலாயிற்று. மறுநாள் 16-ந் திகதியன்று அதிலிருந்து 500 தொன் மூடைகள் இறக்கப்பட்டன. அவைகளை இறக்குவதில் ஆயிரம்பேருக்குமேல் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

## இரண்டாவதுசூளைக்குக் கடன்

காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையிலே இரண்டாவதுசூளை ஒன்றை அமைப்பதற்காகக் கைத்தொழில்மந்திரி அமெரிக்க சர்வதேச நிர்வாகஸ்தாபனத்திடம் 1கோடியே 40லட்சம்ரூபா கடன்கேட்டிருக்கிறார். சீமெந்துஉற்பத்தியைப் பெருக்கும் விஷயமாய்ச் சீமெந்துத்தொழிற்சாலைக் கோர்ப்பரேஷன் செய்திருந்த சிபாரிசுகளின்பேரிலேயே கைத்தொழில்மந்திரி இந்நடவடிக்கையை எடுத்திருக்கின்றார். இலங்கைக்குத்தேவைப்படும்சீமெந்தில் மூன்றில்ஒருபங்குமாத்திரமே தற்போது சீமெந்துத்தொழிற்சாலையில் உற்பத்திசெய்யப்படுகின்றது. இரண்டாவதுசூளை ஸ்தாபிக்கப்பட்டால் பிறநாடுகளிலிருந்து இலங்கையில் சீமெந்து இறக்குமதிசெய்வதைத் தடுத்துவிடலாமென்று கருதப்படுகிறது.

## பாடசாலைக்குப் போகாதபிள்ளைகள்

இலங்கையிலே பாடசாலைசென்று படிக்கவேண்டிய வயதடைந்தவர்களாய் ஏழுலட்சம்பிள்ளைகள் ஏன்பாடசாலைக்குப் போகாதிருக்கின்றார்கள் என்பதுபற்றி விசாரணைநடத்திவருகின்றகமிற்றி இடைக்கால அறிக்கை ஒன்றைவெளியிட்டிருக்கிறது. அதிலே பாடசாலைக்குச் செல்லவேண்டிய வயதுள்ளபிள்ளைகள் பாடசாலைக்குப்போகாத காரணங்கள், வகுப்புவாதநெருக்கடியென்றும், வறுமையென்றும், இந்நாட்டின் கல்விமுறையிலுள்ள குறைபாடென்றும், தச்சுவேலை, மேசன்வேலை, மின்சாரவேலை முதலாம் தொழிற்பயிற்சி பெறுவதற்கானவசதிகள் பாடசாலைகளில் இல்லாதிருப்பதென்றும், போதியபாடசாலைகள் இல்லாமையென்றும்தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையிலே 5வயதுக்கும், 14வயதுக்கும் இடைப்பட்டபிள்ளைகளாய்ச் சுமார் 21 லட்சம்பிள்ளைகள் இருக்கின்றார்கள். இவர்களில் 15லட்சம்பிள்ளைகள் பாடசாலைக்குப்போக, மீதியான 7 லட்சம்பிள்ளைகளும் பாடசாலைக்குப் போவதில்லை. பாடசாலைக்குப்போகாதவர்களில் 35,000 பிள்ளைகள் பெற்றோரின் வறுமைகாரணமாக வீட்டுவேலைகாரர்களாய் இருந்துவருகின்றார்கள்.

# சுதேச வர்த்தமானம்

## முஸ்லீம் மகளிர்பாடசாலை

யாழ்ப்பாணத்திலே புதிதாக அரசினர் முஸ்லீம்மகளிர் பாடசாலைஒன்றை அமைப்பதற்கான திட்டத்திற்கென்று கல்விமந்திரி சுமார் 80,000 ரூபா அனுமதித்திருக்கின்றார். யாழ்ப்பாண முஸ்லீம்மகளிர் பாடசாலையென அழைக்கப்படவிருக்கும்இது யாழ்ப்பாணநகரசபை எல்லைக்குள்ளேயே அமைக்கப்படவிருக்கிறது. இதுவே யாழ்ப்பாணக்குடாநாட்டில் முதன்முதலாக அமைக்கப்படவிருக்கும் அரசினர்முஸ்லீம்மகளிர் பாடசாலையாகும்.

## வகுப்புத்துவேஷ கண்டனம்

திரு. கே. எம். பி. இராஜரத்தினு நாடெங்கும் வகுப்புவாதத்தை உண்டாக்கிவருவதின்மூலம் சிங்களவர்களையும், தேசியஐக்கியத்தையும் சீர்குலைக்க வழிசெய்துவருகிறார்; இவரின்வகுப்புவாதம் கடந்தவாரம் தோட்டங்களிலே கைகலப்புகள்ஏற்பட வழிசெய்தது என்று பாராளுமன்றத்தின் பதுளைப் பிரதிநிதியான திரு. ஜே. சீ. டி. கொத்தலாவல சென்றஞாயிற்றுக்கிழமை வெலிமடையில்நடைபெற்ற கூட்டம் ஒன்றில்பேசி அவரைக்கண்டித்திருக்கிறார்.

## யாழ்ப்பாணம்வந்த பஸ்கள்

யாழ்ப்பாணத்தை விட்டகன்ற சிங்கள'ஸ்ரீ'பஸ்களுக்குப்பதில் பழையனவும், பெரும்பாலும் பழுதடைந்தனவுமான பஸ்கள் தென்னிலங்கையிலிருந்து ஒன்றின்பின் ஒன்றாக வரத்தொடங்கியிருக்கின்றன. சுமார்பத்து வருடங்களுக்குமேல் பாவனையில் இருந்தனவென்று மதிப்பிடத்தக்க இந்தப்பஸ்களை என். ஒ. பி. யூனிற்றிலும், பருத்தித்துறை யூனிற்றிலும் தான் அதிகமாகக் காணக்கூடியதாய் இருக்கிறது. இந்தப்பஸ்கள் ஒவ்வொன்றும் யாழ்ப்பாணம்வந்ததும் பாவனைக்குள்ளாகுமுன் கராச்சுகளுக்குக் கொண்டுசென்று பழுதுபார்க்கப்படுகின்றனவாம்.

## பனம்பொருள் ஆராய்ச்சிநிலையம்

வாங்குவார் இல்லாமையால் பொலிகண்டிப் பனம்பொருள் ஆராய்ச்சிநிலையத்தில் தேங்கிக்கிடந்த சீனியில்பெரும்பகுதி யாழ்ப்பாண அரசாங்க அதிபர், வடமராட்சிக் காரியாதிகாரி, கிராமாபிவிர்த்தி உத்தியோகஸ்தர்கள் ஆகியோரின் தீவிர முயற்சியால் சிலதினங்களின்முன் விலைப்பட்டுவிட்டது. சீனி விலைப்படாதிருந்ததினால் தடைபட்டிருந்தவேலைகள் மீண்டும்நடைபெற்றுவருகின்றன. பதநீரிலிருந்து சீனியும், பனங்களியிலிருந்து மாட்டுஉணவும், இன்னும் குளுக்கோஸ், ஜாம்என்பனவும் செய்யத்தொடங்குவதுபற்றிச் சர்வகலாசாலைத் தமிழ்ப்பேராசிரியர்களும், பிறருஞ்சேர்ந்து ஆலோசித்துவருவதாகக் குடிசைக்கைத்தொழில் பகுதியைச்சேர்ந்த ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

## 18நாளில் 24கொலைகள்

நிகழும்வைகாசியிலே சென்றஞாயிற்றுக்கிழமையுடன்முடிவான 18தினங்களிலும் இலங்கையிலே 24கொலைகள் நடைபெற்றிருக்கின்றன. இவற்றுடன் இவ்வருடத்திலே அன்றுவரைகழிந்துபோன 138தினங்களிலும் இலங்கையில் நடைபெற்றுள்ளகொலைகள் 229. அன்றுவரை இம்மாதத்தில் நேர்ந்துள்ள விபத்துமரணங்கள் 17. இவ்வருடத்தில் அன்றுவரைநேர்ந்துள்ள விபத்துமரணங்கள் 118. சென்றவார இறுதியில் நான்குகொலைகளும், ஓர் விபத்துமரணமும் நிகழ்ந்திருக்கின்றன.

## ஆனையிறவிலுள்ளஉப்பு

ஆனையிறவில் விளைவித்துச் சேமித்துவைக்கப்பட்டுள்ள ஐயாயிரம்தொன் உப்பும் உடனேதானே விற்பனைசெய்யப்படாவிடின் அதைநம்பிவாழும் நானூறுகுடும்பங்கள் வேலைஇழக்க நேரிடுமென்று சொல்லப்படுகிறது. அம்பாந்தோட்டையிலும், புத்தளத்திலும் விளைவித்துச் சேமித்துவைக்கப்பட்டுள்ள உப்பைமாத்திரம் அரசாங்கம் உடனடியாக விற்பனைசெய்துவருகிறது; ஆனால், வடபகுதியிலுள்ள சேமிப்பெல்லாம் அப்படியே இருந்துவருகிறதென்றும் முறையீடுசெய்யப்படுகிறது.

## தொழிற்பயிற்சி வகுப்புகள்

எல்லா மாகாணங்களினதும் தலைநகர்களிலே ஆசிரியர்களுக்குத் தொழிற்பயிற்சிவகுப்புகள தொடக்கப்பட்டிருக்கின்றன. 400 சிங்களஆசிரியர்களும், 150 தமிழ்ஆசிரியர்களும், 1,350 ஆங்கிலஆசிரியர்களும் இவ்வகுப்புகளில்கலந்து பயிற்சிபெறுகின்றார்கள். வருகிறகார்த்திகை மாதம்வரை இந்தவகுப்புகள் தொடர்ந்து நடைபெறும். பின்னர் பரீட்சைகள் நடத்தித் தராதரப்பத்திரங்கள் வழங்கப்படும். இவ்வகுப்புகளில் கலந்துள்ள ஆசிரியர்களுக்குக் கடமைலீவு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பிரயாண அலவன்ஸ் கொடுபடுவதில்லை.

## அரிசிவிலை ஐந்துசதம்குறையும்

கூப்பன்அரிசியின் விலையில் ஐந்து சதத்தைக் குறைப்பதென்று சென்ற செவ்வாய்க்கிழமைகூடிய மந்திரிசபையின் விசேஷகூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் விலையைக் குறைப்பது வருகிறஆனிமாத முதல் வாரத்திலிருந்து நடைமுறைக்குவரும். அதிகரித்துக்கொண்டுவரும் வாழ்க்கைச்செலவைக் கட்டுப்படுத்தும்விஷயமாய் உடனடியாக எடுக்கப்பட்டுள்ள முதல்நடபடிக்கை இதுவாகும். கூப்பன் அரிசியின் விலையைக்குறைப்பதாலே அரசாங்கத்துக்கு வருடம்ஒன்றுக்குக் கோடிக்கணக்கானரூபா நட்டம்ஏற்படுமென்று சொல்லப்படுகிறது. கூப்பன்அரிசியின்விலை தற்போது கொத்தொன்று 40 சதம், இனிமேல் 35 சதமாகும்.

## வேலைநிறுத்தகாலச் சம்பளம்

வேலைநிறுத்தஞ்செய்த அரசாங்க ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அவர்கள் வேலைநிறுத்தஞ்செய்த நாட்களுக்கான சம்பளத்தைக்கழிப்பதென அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. அங்ஙனம்கழிக்குந்தொகையை ஒரேமுறையில் மொத்தமாகக்கழிப்பதால் அவர்களின்குடும்பங்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டத்தைஉத்தேசித்து இந்தவைகாசியிலிருந்து மூன்று தவணைகளிலே அதுகழிக்கப்பட விருக்கிறது.

## சீமெந்துத் தொழிற்சாலை

காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையின் முக்கியமான யந்திரங்களில்ஒன்று பழுதடைந்துவிட்டமையால் தொழிற்சாலையில் சீமெந்து உற்பத்திவேலை சென்றசனிக்கிழமை முதல் நின்றுவிட்டது. மீண்டும் உற்பத்தியைஆரம்பிக்கக் கொழும்பிலிருந்து பழுதடைந்தயந்திரத்திற்குப் பதில் யந்திரம் வரவேண்டியிருக்கிறது. இதற்கிடையிலே காங்கேசன்துறையில் சீமெந்துஉற்பத்தி நின்றுவிட்டமையால் சீமெந்துவிலையேறப்போகிறதென்று யாழ்ப்பாணமெங்கும் காட்டுத்தீபோன்று செய்திபரந்து, பலரும் ஓடோடியுஞ்சென்று சீமெந்துப்பைக்கெற்றுகளை வாங்கியடுக்குகின்றார்கள்.

## "நாம் பறைத்தமிழர் அல்ல"

சமீபத்திலே அரசாங்கஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் வேலைநிறுத்தஞ் செய்தபோது, "பறைத்தமிழர்" என்றுகூறித் தமிழ்ச்சமூகத்தை அவமானப் படுத்தியதற்காகக் கல்விமந்திரி டபிள்யு. தஹநாயகாவைக் கண்டிக்கும் தீர்மானமொன்று சென்றசனிக்கிழமை யாழ்ப்பாணமுற்றவெளியில் நடைபெற்ற ஓர் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்படலாயிற்று. யாழ்ப்பாண நகரசபையின் 13-ம் வட்டாரத் தமிழரசுக்கிளையின் ஆதரவிலே இந்தக்கூட்டம் நடைபெற்றது. இதற்குத்தலைமைவகித்த திரு. எஸ். தியாகராஜா அவர்கள் பேசியபோது: தஹநாயகா தனதுசுயநினைவை இழந்தநிலையில்தான் "பறைத்தமிழர்" என்று சொல்லியிருக்கவேண்டும்; நாம் பறைத்தமிழர்அல்ல, மறத்தமிழர் என்பதை எதிரேவரும் போராட்டத்தின்மூலம் நிரூபித்துக் காட்டுவோமெனக் கூறலாயினர். வேலணைக் கிராமச்சங்க உபதலைவர்பேசுகையில், தமிழ்உரிமைப்போராட்டம் நடத்தினால் நமதுபுகையிலையைத் தென்னிலங்கையிலுள்ள சிங்களவர் பகிஷ்கரிப்பார்களென அஞ்சக்கூடாது; அதேதென்னிலங்கையிலிருந்து அநேக பொருட்களை நாம் தருவிக்கிறோம் என்பதைச் சிங்களமக்கள் மறந்துவிடக்கூடாது; தென்னிலங்கையில் தமிழரின்கடைகள் பகிஷ்கரிக்கப்படுகின்றன; ஆனால், பகிஷ்காரம்என்னும் ஆயுதம இருபக்கமும் கூரானவாளைப்போன்றது; பகிஷ்காரம் செய்பவர்களையும் அதுபாதிக்கும்; பொருளாதாரப் பகிஷ்காரமூலம் தமிழ்மக்களை அடிமைப்படுத்தமுடியாதெனக் கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்துப்பாருங்கள்!

## பிரதமர் முதலாவது துரோகி

"இந்தநாட்டில் ஒருஅங்குலநிலமாவது தமிழருக்குச் சொந்தமானதல்ல. தமிழர்அனைவரும் கள்ளக்குடியேற்றகாரர்கள். சிங்கள ஸ்ரீபஸ்களை யாழ்ப்பாணத்திலும், கிழக்குமாகாணத்திலும் ஓட்டப் பிரதமருக்குத் தத்துவமில்லை. அவர் நாட்டின் முதலாவதுதுரோகியாக விளங்குகிறார். தேர்தல்காலத்திலே நான் அவருடன்சேர்ந்து கூட்டங்களில் பேசினேன். ஆனால், அவர் எங்காவது நியாயமான அளவு அந்தஸ்துத் தமிழுக்குக் கொடுக்கவேண்டுமென்று கூறவில்லை."

**புத்தகுரு, சந்திரசோதிதேரோ.**

## அகற்றும்வரை அமைதியில்லை

"சிங்களம் மட்டும் சட்டம் அகற்றப்படும்வரை நாட்டில்அமைதியின்மை தொடர்ந்துநிலவிவரும். இது மனித உரிமையைமீறும் சட்டமாகும். திரு. பண்டாரநாயகாவின் சமீபகாலஅறிக்கையில் புதியவிஷயம்ஒன்றும் காணப்படவில்லை. தமிழர்களின் உரிமையைச் சிங்களவர்களிடம சரணடையச்செய்வதே பிரதமரின்நோக்கமாகும். நியாயமான அளவில் தமிழ்உபயோகம் எது என்பதைப் பிரதமர்தானகவே முடிவு செய்கிறார். தமிழர்களின்கருத்து இது சம்பந்தமாகக் கோரப்படவில்லை. யதார்த்தநிலையை அறியாதமுறையில் செய்யப்பட்ட சிங்களம்மட்டும்சட்டம் வகுப்புவாதத்தையே பெருக்கும்."

**திரு. ஹன்டி பேரின்பநாயகம்,**
கொக்குவில், இந்துக்கல்லூரி அதிபர்.

## சுயமரியாதையுடன் வாழமுடியாது

"தமிழ்மக்கள் இனிமேலும் உத்தியோகத்தை எதிர்பார்த்திருப்பதில் பயனில்லை. சர்வகலாசாலையில் ஆறுபேருக்கு ஒருதமிழ்மாணவன் சேர்த்துக்கொள்ளப்படும் இன்றையநிலையில் தமிழ்மக்கள் உயர்தரக்கல்வி கற்கும் வாய்ப்பை இழக்கும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். தனிச் சிங்களசட்டத்தைத் தமிழன்ஒப்புக்கொண்டாலுங்கூட இந்த நாட்டில் இனிமேல்அவன் தமிழனென்ற சுயமரியாதையுடன் வாழமுடியாது. தமிழ் மாணவர்கள் இனிமேல் தொழில்நுட்பக்கல்வியிலும், கமத்தொழிலிலுமே கவனஞ்செலுத்தவேண்டும். யாழ்ப்பாணமக்கள் வெங்காயச்செய்கையில் மட்டும் முழுக்கவனத்தையும் செலுத்தக்கூடாது."

**திரு. சி. வன்னியசிங்கம், எம். பி.**

## ஆறுதலடையப் போவதில்லை

"இந்நாட்டில் வாழக்கூடிய தமிழ்ப்பேசும்மக்கள் சிங்களம மட்டும்சட்டத்தை ஒருபோதும் ஏற்று ஒருஇனத்திற்கு அடிமைகளாக மாட்டார்கள். தமதுஉரிமைகளைப் பெறும்வரையும் இந்நாட்டில்வாழும் தமிழ்ப்பேசும்மக்கள் ஆறுதலடையப் போவதில்லைஎன்பதை நாம் பிரதமருக்கும், அவரது அரசாங்கத்துக்கும் எடுத்துக்காட்ட வேண்டும். தற்போதைய நிலையில் தமிழ்ப்பேசும்மக்கள் தங்கள்உரிமைகள் ஒவ்வொன்றையும்பெற ஒரேயொரு வழி சாத்வீக போராட்டமேதவிர வேறுவழியில்லையென்ற ஒரேயொரு முடிவுக்கு வந்துவிட்டார்கள்."

**திரு. வி. என். நவரத்தினம், எம். பி.**

## ஏமாற்றும் ஒருசக்தி

"மேதினம் தங்களுக்குத்தான் சொந்தமென்று கம்யூனிஸ்தர்கள் உரிமைபாராட்டிக்கொள்வது தொழிலாளரைஏமாற்றும் ஒருசதி. மேதினக் கொண்டாட்டம் அமெரிக்காவிலேயே 1886-ம்ஆண்டு முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டதாகும்."

**திரு. எஸ். இராசதுரை, எம். பி.**

"சிங்களம் மட்டும்சட்டமும், அரசாங்கத்தின்நிர்வாகமுறைகளும் தமிழ்ப்பேசும்மக்களையும், அவர்களின்மொழியையும் கீழானநிலைக்குக் கொண்டுவந்திருக்கின்றன. இதுபோன்ற ஒருசட்டத்தைச் சுயமரியாதையுள்ள எந்த மனிதனும் ஏற்றுக்கொள்ளமாட்டான். கட்டுப்பாடுகள் எதுவுமின்றித் தமிழ்ப்பேசும்மக்களுக்கு நாட்டின் நிர்வாகத்தில் உரிய அந்தஸ்து அளிக்கப்பட்டிருந்தால் சமஷ்டிஆட்சிமுறைபற்றிய பிரச்சினையே எழுந்திருக்காது. இவ்விதமான ஒருநிலைமை ஏற்படுவதற்குச் சிங்கள அரசியல்வாதிகளே முழுக்காரணம்."

**செனற்றர் ஜி. நல்லையா.**

## வெற்றிபெற மாட்டார்கள்

"தங்கள் போராட்டத்திலே தமிழர்கள் ஒருபோதும் வெற்றிபெறமாட்டார்கள். அநேகமொழிகள் உபயோகிக்கப்படும் நாடுகளில் பெரும்பான்மைமக்களின் மொழிக்கு முதலிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழர்கள் எவ்வளவுபோராட்டம்நடத்தி நாட்டில் கலவரத்தை உண்டுபண்ணினாலும் மக்கள் ஐக்கியமுன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் சிங்களத்தைத்தவிர வேறெந்தமொழியும் இலங்கையின் அரசாங்கமொழியாக்கப்படமாட்டாது."

**திரு. ஏ. அதிகாரி,**
வாரியப்பொலை, எம். பி.

## புத்தகுரு பேசுகின்றார்

"சாதி-மத பேதம்ஒழிந்து, இலங்கை வாழ்மக்கள் பிறரை மதித்துவாழும் மனிதாபிமானக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும்வரை நாடுசுபீட்சமடைவது துர்லபம். அரசியற்துறையிலும் இலங்கை பின்தங்கநேர்ந்தது இனத்துவேஷம், சமயபூசல்கள் காரணமாகவே. இனத்துவேஷத்துக்குத் தங்களைப் பலியாக்கிக்கொண்டுள்ள சிங்களமக்கள் காலஞ்சென்ற தமிழ்ப்பெரியார்களும், நண்பர்களுமான சேர் பொன்னம்பலம் இராமநாதன்போன்ற தலைவர்களை நினைவுகூரவேண்டும். துவேஷக்கொள்கைகளுக்கு இடங்கொடாது அவர்கள் நாட்டுக்குச்செய்த சேவையைச் சிங்களமக்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இருசமூகங்களுக்குமிடையே கடந்தகாலத்தில்நிலவிய நல்லுறவைத் தமிழர்களும் நினைவுகூரவேண்டும். தற்போதைய அரசாங்கம் மக்களுடையதென்பதில்சிறிதும் ஐயமில்லை. ஆனால், நிர்வாகவிஷயமாய்த் தமது சகாக்கள்சிலரின் பூரணஒத்துழைப்புப் பிரதமருக்குக்கிடையாதது கவலைக்கிடமானது."

**பண்டித யடிநுவா**
**இந்தாரத்னதேரோ.**

## சட்டத்தைத் திணிக்கமுடியாது

"தமிழர்களின் இரத்தவெள்ளத்தில் தானும் இந்தச் சிங்களவகுப்புவாத அரசாங்கத்தின் தனிச்சிங்களசட்டத்தைத் திணிக்கமுடியாதென்று பிரதமர் பண்டாரநாயகா இக்கூட்டத்தை நேரில்வந்து பார்த்திருந்தால் உணரமுடியும்."

**திரு. எஸ். இராசதுரை,**
மட்டக்களப்பு, எம். பி.

## பிக்குகளின் அட்டகாசம்

"சித்தார்த்தர், அசோகர், மிகுந்தன், சங்கமித்தைஆதியோர் அரசபோகத்தைத்துறந்து, நாட்டிலே அன்பை வளர்த்தார்கள். புத்தமதத்தைத் தழைத்தோங்கச் செய்தார்கள். ஆனால், இன்று அதற்கு நேரடிச் சவால் விடுகிறார்கள் இங்குள்ள அரசியல்பிக்குகள். இங்குள்ள சிலபிக்குகள் அரசியலில்செய்யும் அட்டகாசம் புத்ததர்மத்திற்கே இழுக்கைக்கொடுத்துவிட்டது. அறுபதாயிரம் காடையர்கள் இங்குபடையெடுக்க இருக்கிறார்களாம். அந்தநேரத்தில் நாங்கள் சும்மாயிருக்கப் போகிறோமோஎன்று அந்தக் காடையர்கள்கூட்டத்தைக் கேட்கிறேன்."

**திரு. க. தங்கவேல்,**
மட்டக்களப்பு.

# மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**தாண்டவன்வெளிப் பங்கில் :**

அன்று 26-4-58 சனிவாரம் பிற்பகல். ஆலயமணிகள் ஆரவாரித்தன. மேளதாளவாத்தியங்கள் இசைத்தன. வெடிகள் அதிர்ந்தன. மஞ்சள்—வெள்ளை வர்ணக்கொடிகள் சமூகமளித்திருந்தார் கரங்களில் அசைந்தாடின. ஆலயமுன்றிலில் அழகுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்த பந்தரின்கீழ் பங்குக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமிகள் தலைமையில் இவைகள் நிகழ்ந்துகொண்டிருந்தன. திரிகோணமலைமேற்றிராசன கத்தோலிக்கசேவை அதிபரான வண. ஈ. கிறவுதர், S. J. சுவாமிகளும், கிழக்குமாகாண அதிபர் திரு. டபிள்யு. பத்திருண அவர்களும், திரிகோணமலை மேற்றிராசன ஐக்கிய சங்கதலைவர் திரு. ஜே. ஜே. டேவிட் அவர்களும், காரியதரிசி திரு. கே. எல். இராசேந்திரம் அவர்களும் வந்துகூடி ஆண்டகை அவர்களின் வரவை எதிர்நோக்கிநின்றனர். மணி 5-30. அப்போஸ்தலிக்க ஸ்தானபதியாகிய மகாமேன்மைதங்கிய ஜே. ஆர். நொக்ஸ் ஆண்டகைஅவர்கள் நம்திரிகோணமலை மேற்றிராணியாரான மகாவந். இக்னேஷஸ் கிளென்னி, S. J. ஆண்டவர்அவர்களுடன் தமது காரியதரிசியான வண. கஸிடி சுவாமிகள் சமேதராய் மோட்டார்ரதத்தில் வந்திறங்கினர். அவ்வமயம் நம பங்குக்குரவர் பாப்பரசரின் பிரதிநிதிஅவர்களுக்கு அழகியதோர் பூமாலைசூட்டி ஆங்கு சமூகமளித்திருந்த குருப்பிரசாதிகளையும், பிரமுகர்களையும் அறிமுகம் செய்துவைத்தார். பின்னர் அழகுறச் சிங்காரிக்கப்பெற்றிருந்த மோட்டார்வாகனத்தில் அப்போஸ்தலிக்க ஸ்தானபதி ஆண்டகைஅவர்களும், நமது மேற்றிராணி ஆண்டவர்அவர்களும் அமர்ந்து வாத்தியங்கள் இசைக்க, வெடிகள் அதிர, கொடிகள்அசையக் கிறீஸ்தவர்களும், பாடசாலை மாணவர் மாணவிகளும், பத்திச்சபையினரும் அணிவகுத்துச் செல்லப் பொதுமக்களால் அலங்கரிக்கப்பெற்றிருந்த திரிகோணமலை வீதி வழியே பவனிசென்றனர்.

**புளியடிக்குடாப் பங்கில் :**

புளியடிக்குடாப் பங்குக்கிறீஸ்தவர்கள் இங்குள்ள சின்ன ஆஸ்பத்திரிச் சந்தியில் இயற்கையேயென இலங்குமாறு அமைத்த பந்தரின்கீழ் ஒன்றுகூடி ஆண்டகைஅவர்களின் வரவை எதிர்நோக்கிநின்றனர். பவனி பந்தரை அடைந்ததும் வெடி, கொடி, வாத்திய வரிசைகளோடு பங்குக்குரவர் வண. ஏ. செலர் சுவாமிகளால் ஸ்தானபதி ஆண்டகை அவர்களுக்குப் பூமாலை அணிவிக்கப்பெற்றது. பின்னர் தாண்டவன்வெளி, புளியடிக்குடாப் பங்குக்கிறீஸ்தவர்களையும், பிறரையும் கொண்ட மக்கள்குழாம் புளியந்தீவை நோக்கி அலங்கரித்திருந்த திரிகோணமலைப் பெருந்தெருவூடே மாபெருஞ் சிறப்புடன் இருபங்குக்குரவர்களதும் தலைமையில் ஒழுங்காகப்பவனிசென்றுகொண்டிருந்தது. நகர்காவலர்களும் தங்கள் அரும்பணியை இவ்வமயம் உதவியமை ஈண்டு குறிப்பிடற்குரியது.

**புளியந்தீவுப் பங்கில் :**

பவனி கோட்டைமுனைப் பாலத்தை அணமியது. புளியந்தீவுக் கிறீஸ்தவர்கள் தம்பங்குக்குரவர் வண. ரி. ஆறன்ஸ் சுவாமியவர்கள்தலைமையில் பவனியை வரவேற்றகாட்சி மிகமாட்சியாக இருந்தது. ஆம், கீழே பாடும் மீனினம் நிறைந்த ஓடும்நீரோடை. மேலேஆடும் கொடிகளுடன் துவசதோரணங்கள். இடையே பூமாதேவியைப் பார்த்த பக்கமெல்லாம்மக்கள்குழாம். எள்ளிட இடமின்றி அத்தனை மாபெருங் கூட்டம். புளியந்தீவுப் பங்குக் குரவர் இன்பகரமான அழகிய சூழ்நிலையில், பொருத்தமான நல்லிடத்தில், பாலத்தில் அப்போஸ்தலிக்க ஸ்தானபதி ஆண்டகைஅவர்கட்குப் பூமாலை புனைந்து நகரினுள் ஊர்வலமாக அழைத்துச்சென்றனர். வெள்ளை — மஞ்சள் கொடிகளினாலும், மகரதோரணங்களினாலும் அலங்கரிக்கப்பெற்றிருந்த புளியந்தீவுவீதியின் காட்சியும் சிறந்ததே. வெடிகள் அதிர்ந்துகொண்டேயிருக்க, நாதசுர வாத்தியங்களிசைக்க ஊர்வலம் மட்டக்களப்பு மைதானத்தை அடைந்தது. ஆங்கு அமைக்கப்பெற்றிருந்த உயராசனத்தில் ஆண்டகை அவர்கள்அமர்ந்ததும் நம்மேற்றிராணி ஆண்டவர்அவர்கள் ஸ்தானபதிஆண்டகையை வரவேற்றுச் சிறந்த சொற்பொழிவொன்றினைக் கிழக்கு இலங்கைத் திருச்சபையின்சார்பில் நிகழ்த்தினர். பின்னர் கிழக்குமாகாணஅதிபர் திரு. டபிள்யு. பத்திருணஅவர்கள் உத்தியோக தோரணையில் ஆண்டகை அவர்களை வரவேற்றுச் சொற்பொழிவாற்றினர். திரிகோணமலை மேற்றிராசன ஐக்கியசங்கத் தலைவர் அவர்களும் சொற்பொழிவாற்றினர். பின்னர் அப்போஸ்தலிக்கஸ்தானபதிஅவர்கள்எழுந்து, பட்டினத்து மூன்று பங்கினரும், மற்றும் பிரமுகர்களும் ஒன்றுகூடி மாபெரும் வரவேற்பு வைபவம்ஒன்றைத் தமக்கு நிகழ்த்தியமைக்கு நன்றிதெரிவித்துக் கத்தோலிக்கமக்களுக்கு அருமை பெருமை வாய்ந்த பலநன்மொழிகள் பகர்ந்து எல்லோருக்கும் தமது உள்ளன்பைக் காட்டிநின்றார். அதன்மேல் அங்கு சித்திரவிசித்திர வேலைப்பாடுகளுடன் நவமாக அமைக்கப்பட்டிருந்த பலிபீடத்தில் பாடகர்குழாம் கீதம் இசைக்கத் திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும், பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஆசீர்வாதமும் அளித்தார். பின்னர் மட்டக்களப்பு மைதானத்தில் பரந்துநிறைந்த மக்கள் கூட்டத்தினர் ஒவ்வொருவரும் சலிப்பின்றிக் களைப்பின்றித் தமது திருக்கணையாழியை முத்திசெய்ய வசதிஅளித்தனர்.

---

**விற்பனைக்கு!**

**அர்ச். பிலிப்புநேரியார் சரித்திரச்சுருக்கம்**

விலை சதம் 40.

**கிடைக்கும் இடங்கள் :**

பத்தாவத்தை—இளவாலை,
செம்பியன்பற்று,
புறக்கோட்டை—கொழும்பு,
தோப்பு—கொச்சிக்கடை,
அல்லைப்பிட்டி—யாழ்ப்பாணம்.

கட்டளைக்குரவர்,
இளவாலை.

---

✝

**யோசெவ் போல் அவர்களின்**
**8-ம் வருட**
**மரண ஞாபகம்**

**இறப்பு : 25-5-1950**

இவருடைய ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு இரந்துநிற்கும்,

மனைவி—மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கானிடமாக ஜப்பானின் முதலாவது ஸ்தானிகர்

பரிசுத்த ஸ்தானத்தினிடமாக நியமனஞ்செய்யப்பெற்ற ஜப்பானிய முதலாவதுஸ்தானிகரான திரு. சென்ஜின் ரிசுரூேக்காஅவர்களுக்குப் பரிசுத்தபாப்பரசர் அன்றுசெவ்வாய்க்கிழமைபேட்டியருளலாயினர். அப்பேட்டியின்போது ஸ்தானிகர் தமதுநியமன அதிகாரப்பத்திரங்களை அவரிடம் சமர்ப்பித்தருளினுர். ஜப்பானிய அரசாங்கம் வத்திக்கானிடமாய் இருந்துவருகின்ற தனதுபிரதிநிதியைத் தூதுவர்வரிசையிலிருந்து ஸ்தானிகர்வரிசைக்கு உயர்த்திவிடச் சமீபத்தில் தீர்மானித்தது. அன்றுதினம்நடைபெற்ற அதிகாரபூர்வமானவைபவம் அதனைப் பூர்த்திசெய்துள்ளது. பேட்டியின்போது பாப்பரசர்பேசுகையில், பரிசுத்தஸ்தானத்திடமாய் இருந்துவருகின்ற தனதுபிரதிநிதியை ஸ்தானிகர் வரிசைக்கு உயர்த்தி அவருக்கு முக்கியத்துவம்அருள ஜப்பானிய அரசாங்கம் செய்துள்ள தீர்மானத்தையிட்டுத் தமக்குள்ள மனேதிருப்தியை ஸ்தானிகருக்குத் தெரிவித்துக்கொண்டார். அவர் கூறிய அதிகம்நல்லஅபிப்பிராயங்களுக்காக நன்றிதெரிவித்தார். ஜப்பானிய சக்கிரவர்த்திக்கும், அரசாங்கத்துக்கும், ஜப்பானிய மக்களுக்கும் பரிசுத்தஸ்தானத்தின் நல்விருப்புகளை அவர்மூலம் சமர்ப்பிக்கலானுர்.

—(~)—

# புதிய குரவரின் முன்னேர் வேதகலாபனைநடத்திய மன்னர்கள்

ஜப்பானிலே பறன்ரொகுகாவாபிரபுவின் புதல்வரும், அந்நாட்டின்சரித்திரத்திலே கிறீஸ்துசமயத்தை மிகஉக்கிரமமாகவிரோதித்து வேதகலாபனைநடத்திய அரசர்களின்சந்ததியில் உதித்தவருமான வண. மிக்கேல் ரோகுகாவாஎனும் குருத்துவமாணவர் அங்கு கியோட்ரோநகரிலுள்ள அர்ச். பிரான்சிஸ்சவேரியாரின் ஆசனக்கோவிலில் சமீபத்திலே குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றிருக்கின்றுர். லெயாசுரொகுகாவாஎன்பவர் பிளவுபட்டிருந்தஜப்பானை ஒன்ருகச் சேர்த்துத் தற்போது ரோக்கியோநகரென அறியப்படுவதான எடோஎனுமிடத்திலே தலைநகரை ஏற்படுத்தியபின்னரே 17-ம்நூற்ருண்டின் ஆரம்பத்தில் ரொகுகாவின்குடும்பம் ஜப்பானில் பெரும்பிரஸ்தாபத்துக்கு வரலாயிற்று.

1864-ம்ஆண்டு இந்தப்பேரான யுத்ததலைவன் ஜப்பானிலிருந்துவந்த 3,00,000கிறீஸ்துவர்களையும் விரோதித்துக் குரூரவேதகலாபனைஒன்றைத் தொடக்கினுன். மேல்நாட்டினரான ஐரோப்பியர்கள் அந்நாட்டில் கால்வையாது தடைசெய்துவிட்டான். இவனுடையபுதல்வனுன ஹிடெராடாஎன்பவன் அவனைத் தொடர்ந்து ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தபோது பல்லாயிரக்கணக்கானகிறீஸ்துவர்களைக் கொன்றழித்தான். மத்தியு பெறிஎன்ற கடற்படைத்தளபதி 1850-ம் ஆண்டு ஜப்பானிலே மேல்நாட்டினர் திரும்பவும் பிரவேசிக்க வழிதிறந்துவிடுகிறவரை ரொகுகாவாவின்குடும்பமே அதிகாரத்தில் இருந்துவரலாயிற்று.

புதியகுருப்பிரசாதியின் தந்தையாரான பறன்ரொகுகாவாபிரபு யுத்தவிமானம்ஒன்றைச்செலுத்திய முதலாவதுஜப்பானியராவர். சென்றஉலகயுத்தத்தில் இவர் ஓர்ஜப்பானியஜெனறலாய் இருந்தார். யுத்தத்தின்பின் இவர் தனதுபட்டம்பதவிகள், குடும்பசொத்துகளெல்லாம் இழந்து தன்குடும்பத்தைக் கதியற்றநிலைமையில் விடலாயினர். அதேகாலத்தில் பாலியமிக்கேல் கியோட்ரோசர்வகலாசாலைப் பிரவேசபரீட்சையில் அரங்கேறினுர். ஆனுல், இவருக்குச் சொந்தவீடு இல்லாமையால் அந்நகரில் மேரினேல்மிஷனரிஒருவரால் வறிய மாணவர்களுக்கென நடத்தப்பட்டுவந்த விடுதிஒன்றில் புகலிடம்அருளப்படலாயினுர்.

—(~)—

### அகழ்களின் கிறீஸ்துநாதர்

''அகழ்களின் கிறீஸ்துநாதர்'' என அறியப்படும் சுரூபம்ஒன்றைப் போர்த்துக்காலுக்குப் பிரான்ஸ் அனுப்பவிருக்கின்றது. 1914-ம்ஆண்டுமுதல் 1918-ம் ஆண்டுவரை நடைபெற்ற முதலாவதுஉலகயுத்தத்திலேஅகழ்களில் நின்று போராடிய யுத்தவீரர்களால் இந்தச்சுரூபம் செய்யப்பெற்றது. ஆயினும்இது வெடிகுண்டுவீசப்பட்ட நோர்மான்டியபட்டினம்ஒன்றின் இடிகரைகளுள்இருக்கச் சமீபத்திலே கண்டறியப்படலாயிற்று. பிரான்ஸிய, போர்த்துக்கிச, பிரித்தானியபடைகள் அக்கபக்கமாக நின்று யுத்தஞ்செய்த லீஸ்நகர யுத்தத்தின் 40-ஆண்டுநிறைவை இந்தச்சுரூபஅன்பளிப்பு ஞாபகப்படுத்துவதாகும். சுரூபம் விசேஷவிமானம்ஒன்றிலே ஆகாயப்படைமந்திரியுடன் லிஸ்பன் நகர்போய்ச் சேரவிருக்கிறது.

---

### கதியற்றவர்களின் சீமாட்டி

''கதியற்றவர்களின் சீமாட்டி'' என்று பல்லாயிரக்கணக்கான மக்களால் கொண்டாடப்பட்டுவந்து தனது50-ம்வயதிலே பரமனடிசேர்ந்த யேசுவின்தெரேசாதாயார் அன்றுஞாயிற்றுக்கிழமை அர்ச். பேதுருவானவர்மகாதேவாலயத்தில் முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்பெற்றபோது, சீவாபாயத்துக்குரிய நோய்கண்டிருந்து அவரின்சலுகையால் அற்புதமாகக்குணமடைந்த ஸ்பானிய பெண்மணிகள்இருவரும் சமுகமாயிருந்தார்கள். முத். தெரேசாதாயார் கைநெகிழப்பெற்றவயோதிகர்களை ஏற்றுப்பராமரிப்பதற்கென்று ஓர்கன்னிகாசபையை அடியிடலானுர். அன்றுசாயந்தரம் புதியமுத்திப்பேறுபெற்றபட்டதாரிக்கு வணக்கவழிபாடு செலுத்துவதற்கென்று பரிசுத்தபாப்பரசர் பரிவாரசமேதராய்ப் 12கருதினுல்மாரும், 20அதிமேற்றிராணிமார்,மேற்றிராணிமாரும் புடைசூழ மகாதேவாலயஞ்சென்றபோது, 30,000மக்கள் ஆர்ப்பரித்து அவரைவாழ்த்திநின்ருர்கள். ஓர்வறிய கமக்காரனின் புதல்வியான தெரேசாதாயார் முந்தஓர்ஆசிரியையாயிருந்து 1872-ம்ஆண்டு தனதுசபையை அடியிடலாயினர்.

---

### பாத்திமாமாதாவின் பாரியசுரூபம்

பாத்திமாநாயகியின் 15அடி உயரமான மாபிள்கல்சுரூபம் ஒன்று அன்றுசெவ்வாய்க்கிழமை இத்தாலியதேச லெக்கோண்நகரிலிருந்து 'ஸ்ரெல்லா' எனும்கப்பலிலே லிஸ்பன்நகருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பதினேழரைத்தொன்நிறைகொண்ட இந்தச்சுரூபம் ஓர்அமெரிக்க தொமினிக்குவின்சபைக் குரவரான வண. தோமஸ் மைக்ளின்சுவாமியாரின் கைவேலைப்பாடாகும். 1917-ம்ஆண்டு பாத்திமாபதியிலே மாதாவின்காட்சிபெற்ற மூன்றுபிள்ளைகளிலும் இன்னுமே உயிர்வாழ்ந்திருக்கும் சங். லூஸியா கன்னியாஸ்திரியால் கொடுபட்டவர்ணனையை மேற்கொண்டு சுவாமியார் இந்தச்சுரூபத்தைச் செய்யலாயினர். திண்மையும், வெண்மையுமான பாரிய மாபிள்கல்கண்டம் ஒன்றைக் கொண்டு அவர் இத்தாலியிலே பியெற்ருசன்தாஎனுமிடத்தில் இதனைச்செய்துமுடித்தார். இந்தச்சுரூபம் தனதுமார்பிலே தங்க இருதயம்ஒன்றைக் கொண்டிருக்கின்றது.

---

● ஆஸ்திரேலியாவிலே சிட்னிநகரில் கிறிஸ்தியன்பிறதர்மாரால் லொட்டறிஎனப்படும் அதிர்ஷ்டச்சீட்டு ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் முதலாவதுவெகுமதி 1,52,000 பவுண்பெறுமதியுள்ள ஓர்ஹோட்டலாகும். வெகுமதிப்பணம் மொத்தமாக 1,76,000 பவுண். இந்த அதிர்ஷ்டச்சீட்டிலிருந்துகிடைக்கும் ஆதாயப் பணத்தை அவர்கள் தங்கள்கல்விஸ்தாபனங்களின் அபிவிர்த்திக்குச் செலவிடுவார்கள்.

—(~)—

# ஆசா. தமியான் சுவாமியாரின் சீவிய வரலாற்றுச் சினிமாப்படம்

உலகப்பிரசித்திபெற்ற எழுத்தாளரும், பேச்சாளருமாக விளங்கியிருந்து சிலவருடங்களின்முன் காலஞ்சென்ற திரு. ஜி. கே. செல்ரேட்டன்என்றகத்தோலிக்க பிரமுகர் மனந்திரும்புமுன்—அதாவது ஓர்அங்கிளிக்கன் சபைப் புறெட்டஸ்தாந்த கிறீஸ்துவராயிருந்தபோது ''சுவாமி பிறவுண்''என்ற பிரஸ்தாபம் பெற்ற புத்தகம்ஒன்றை எழுதியிருந்தார். இந்தப்புத்தகவரலாறு ஓர்சினிமாப்படமாகத் தயாரிக்கப்பட்டபோது அதிலே ''சுவாமி பிறவுண்''இட்மாக நடித்த திரு. அலெக் கினெஸ்அவர்கள் தென்பசிபிக் சமுத்திரத்திலுள்ள மொலக்காய்தீவின் குஷ்டரோகர்களுக்கென்று தமதுவாழ்க்கையை அர்ப்பணஞ்செய்த ஓர் மிஷனரியகுருவான ஆசா. தமியான்சுவாமியாரின் வரலாறுபற்றிய சினிமாப்படம்ஒன்றைத் தயாரிக்கத் தொடங்கியிருக்கின்ருர். ஓர் புறெட்டஸ்தாந்தராயிருந்து மனந்திரும்பிக் கத்தோலிக்கரான இவர் கடைசியாக நடித்தபடம் ''குவாய்நதிமேல் பாலம்'' என்பதே.

ஆசா. தமியான் சுவாமியார் சாதியிலே பெல்ஜியர். அங்கே 1840-ம்ஆண்டு லுவெயின் நகருக்குச் சமீபமாகப்பிறந்தவர். ஒனலூலுஎனுமிடத்தில் 1864-ம்ஆண்டுகுருப்பட்டம் பெற்றவர். 1873-ம்ஆண்டுஇவர் மொலக்காய்தீவில் இருந்துவந்த 600குஷ்டரோகர்களினதும் பரிதாபகரமான நிலைமையைக் கவனித்து மனமிரங்கியவராய் அவர்கள்மத்தியில் தொண்டாற்றத் தீர்மானித்தார். இந்தக் குஷ்டரோகர்களையெல்லாம் ஹவாய்அரசாங்கம் அங்குஅனுப்பிவைத்திருந்தது. இவ்விதம் குஷ்டரோகரிடையே தொண்டாற்றியமுதற்குருவானவர் இவர்தான்.

1885-ம்ஆண்டில் ஓர்நாள் ஓர்பிரசங்கஞ்செய்ய இவர் தொடங்கியபோது, ''எனது அருமையான சகோதரர்களே''—''குஷ்டரோகர்களாகிய நாங்கள்......''என்று ஆரம்பித்தார். ஏன்அவ்விதம் ஆரம்பித்தார்? அவரையும் அந்தத்தொற்றுநோய் பற்றிக்கொண்டமையால்தான். ஆயினும்அவர் தாம்மரிப்பதற்கு முன் மேலும்நான்குவருடம் அவர்கள்மத்தியில் தொண்டாற்றினுர். விரைவிலே அவர் ஓர் உலக வீரர்திலகமாயினுர். பிந்த 7-ம் எட்வாட் அரசராய்வந்த உவேல்ஸ்இளவரசர் இந்தவீரர்திலகமாகிய குருப்பிரசாதிக்கு மனேவருட்சிக்குரிய ஓர்பாராட்டுரைவழங்கினுர். பிரித்தானிய அரசாங்கம்இவரின்ஞாபகத்தைக் கௌரவிக்குமாறு ஓர்மாபிள்கல் சிலுவையுடன் மொலக்காய் தீவுக்கு ஓர்யுத்தக்கப்பலை அனுப்பியது. தமியான்சுவாமியார் பெல்ஜியத்திலே அடக்கஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர். இவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுவதற்கான அப்போஸ்தலிக்க விசாரணை 1956-ம்ஆண்டு ரூேய்அதிமேற்றிராணியாரால் மலைன்ஸ்நகரில் ஆரம்பிக்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைகாசி மாதம்

**பொதுக் கருத்து:** பெருதேச நகர்களில் ஆன்மவிசாரணை நலமுறநடைபெறுவதற்காக வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து:** இந்தியாவில்லௌகீக வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுபோல, ஆன்மீகவாழ்வு நிலைமையையும் உயர்த்துவதற்காக மன்றாடிக் கொள்வது.

சத்திய வேத

# பாதுகாவலன்

1958-ம் ஆண்டு
வைகாசி மாதம் 22-ந் திகதி

## தூய ஆவியானவர்

ஆண்டுதோறும் கத்தோலிக்க சபை அனுட்டித்துவரும் முதல் தரத் திருஉற்சவங்களில் தூய ஆவியின் வருகைமகோற்சவமும் ஒன்றாகும். இது திருச்சபையின் ஆரம்பத்தையும் குறிக்கும். எனவே, இதுவிசேடம்பெறக்காரணமுண்டு.

திருமீட்பர் மோட்சஞ்செல்லுமுன் தமதுசீடருக்கும், அடியாருக்கும் கூறியதென்னை? நான் செல்வதையிட்டுக் கவலை ஒழிந்திருங்கள்; நான்சென்றால் ஆறுதலளிக்கும் தூயஆவியானவரை அனுப்புவேன்; அவர் உங்களுக்கு எல்லாவற்றையும் படிப்பிப்பார்; பிதாவிலிருந்து புறப்படுகிற உண்மைஆவியானவர் என்னைப்பற்றிச் சாட்சியஞ்சொல்லுவார்; தூயஆவியானவர் பிதாவிடத்திலும், சுதனிடத்திலுமிருந்து புறப்படுகிறார்; அவர் பிதாவுக்கும், சுதனுக்கும் சரியொத்தவர்; அவர்களைப்போன்று தனி ஆட்தன்மை உள்ளவர்; தூய ஆவியானவர் கடவுள். அர்ச். திரித்துவத்தின் மூன்றாம்ஆள்.

தூயஆவியானவர் திருச்சபையின் ஆன்மா. உயிர்ப்பும், இயக்கமும், வளர்ச்சியுங் கொடுப்பவர். பெந்திக்கோஸ்த் தினத்தன்று அவர்எழுந்தருளியது திருச்சபையின் ஆரம்பம். கிறீஸ்துநாதர் திருச்சபையை அடியிட்டார்; ஆயின் தூயஆவியானவர் வருமுன் அது காற்றைஎதிர்நோக்கியிருக்கும் பாய்க்கப்பல்போலிருந்தது. அவர்வந்ததும் சம்பேதுருவின் கப்பல் பாய்விரித்து இவ்வுலகம்எனும் சாகரத்தில் புறப்பட்டு மக்கள் அனைவருக்கும் நன்மை அளித்தது. தூயஆவியானவருக்கும், திருச்சபைக்கும் எத்துணைநெருங்கிய ஐக்கியம்உண்டு எனில் "எங்குகிறீஸ்துவின் சபை உளதோ, அங்கு தூயஆவி உளர்" என அர்ச். இரனேயுசும், கத்தோலிக்கசபை தூய ஆவியின் நகரம்" என அர்ச். அகுஸ்தீனும் கூறினர்.

அந்தப் பெந்திக்கோஸ்துத் தினத்தில் தூய ஆவியானவர் அப்போஸ்தலர்மேல் எழுந்தருளியபோது அவர்களுக்கு ஞான வெளிச்சத்தையும், மனத்திண்மையையும் அருளினார். யூதமதப் பெரியாருக்குஅஞ்சி அடைத்துக்கொண்டவர்கள் அஞ்சா நெஞ்சினராயினர். உண்மை ஞானம்பெற்றனர். யேசுவின் போதகத்தைப் பொருத்தமுறக் கிரகித்தனர். உலக மக்களை ஞானவழிநடாத்த வலிமைபெற்றனர். இன்றும் பரிசுத்தபிதாவும், அவருடைய ஊழியரான மேற்றிராணிமார், குருமாரும் ஞானம்நிறையவேண்டும் யேசுவின் போதனையைப் பாரெங்கும் பரப்பவேண்டும். அஞ்சா நெஞ்சத்துடன் யேசுவிற்குச் சாட்சிகளாய் விளங்கவேண்டும்.

ஆதித் திருச்சபையில் அப்போஸ்தலர்மாத்திரமன்று இல்லறஅடியாரும் திருத்தொண்டாற்றினர். "சென்றவிடமெல்லாம் அவ்வாக்கியத்தை (சுவிசேஷத்தை)க் கூறிச்சென்றனர்." அதேபோன்று இன்றும் தமது வாழ்க்கையாலும், சேவையாலும் வாக்கியத்தைக் கூறுபவர் அதிகம் தேவைப்படுகின்றனர்.

எம்நாட்டில் திருச்சபை விருத்தியடைய அத்தகைய தொண்டாற்றியவர் பலர்உளர். அவர்களுடையதொகை பெருகவேண்டும். குருமார்தொகை குறைவானமையின் இல்லறத்தொண்டர் தேவைப்படுகின்றனர்.

தொழிலாளர் சமூகத்தைச் சீர்ப்படுத்தித் தொழில்மூலம் புனிதமடையலாமென உணரச்செய்யவேண்டும். மக்கட் சமுதாயத்தைக் கிறீஸ்துவமக்களே தம் வாழ்க்கையால் மாற்றியமைத்துக் கிறீஸ்துவின் முத்திரை பதிக்கவேண்டும். இத்தொண்டு இக்காலத்தில் அவசியம்எனத் திருச்சபையின் ஞானத்தலைவர் கருதுகின்றனர்.

காலத்துக்கேற்பத் தொண்டர்களைத் தோற்றுவித்துக் கிறீஸ்துவின் சாட்சியத்தைக் கூறச்செய்யும்தூயஆவியானவர் எமது காலத்துக்கு அவசியமான இத்தொண்டரையும் தோன்றச்செய்வர்என்பது திண்ணம்.

---

## காப்பிரிகளான மேற்றிராணிமார்

ஐக்கியஅமெரிக்கதேச பேசென் லூயிஸ்நகரிலுள்ள திவ்வியவார்த்தையானவரின் பிரசுரகாரியாலயம் வெளியிட்டுள்ள புதிய சிறுதுண்டுப் புத்தகம்ஒன்றில் கண்டுள்ளபடி, நிகிறோவரெனப்படும் காப்பிரிச்சாதியினராய் 23கத்தோலிக்கமேற்றிராணிமார் தற்போது சீவந்தராயிருக்கின்றனர். "கத்தோலிக்க காப்பிரி மேற்றிராணிமார்"எனும் தலையங்கத்துடன் வண. கார்லோஸ் லூயிஸ்சுவாமியாரால் எழுதப்பெற்ற இச்சிறுநூல் ஒவ்வோர் மேற்றிராணியாருடையவும் சீவியவரலாற்றையும், பிரதிமைப் படத்தையும் அடக்கியிருக்கின்றது. இந்தக்காப்பிரிமேற்றிராணிமார் எல்லோரும் 12-ம்பத்திநாதபாப்பரசராலேயே நியமனஞ்செய்யப் பெற்றவர்களென்றும், அவர்களில் ஒருவர்நீங்கலாக ஏனையோரெல்லாம் ஆபிரிக்காவிலேயே நியமிக்கப்பெற்றிருக்கிறார்களென்றும் இந்நூல்தெரிவிக்கின்றது. அந்தஒருவர் மேற்இந்திய தீவுகளைச்சேர்ந்த ஹெயிற்றியிலே போட்டோப்பிறின்ஸ் அதிமேற்றிராசனத்தின் உதவி மேற்றிராணியாரான றெமி அகஸ்ரீன் ஆண்டவரே.

# சிறுமலரும் நறுமணமும்

பதினைந்துவயதுப்பாலிய பெண். இன்பம்ததும்பும் தனது எழில்முகத்தைக் கருநிறத்துணியால் திரையிட்டுக்கொண்டாள். இனி உலகம் அவளைக் காணமுடியாது. அவளும் அதனை ஏறெடுத்தும் பாராள் கார்முகிலெனக் கறுத்துச்சுருண்ட அவளுடைய கூந்தல் கத்தரிக்கோலால் வெட்டப்பட்டது. வெட்டுண்ட அதனைச் சேர்த்தெடுத்துத் தனது தியாகஉள்ளத்தின் சீரியசின்னமாய்ப் பீடத்தின்அடிப்படிகளில் சமர்ப்பித்தாள். வருகவென்று அழைப்பதுபோல் வாய்பிளந்துநின்ற சிறைக்கதவுகள் பிறகு போகவிட மாட்டோமென்று தடுப்பதுபோல் இறுகச்சாத்திக்கொண்டன. ஆம், அன்பின் கைதியாய் அவள் வாழவிழைந்தாள்—அடைத்துக்கொண்டாள் தன்னைக்கன்னியர்மடத்தினுள்.

அவளுடைய உற்றார்உறவினரில் ஒருசிலர் இதனைக்கண்டனர். கலங்கினர். கண்ணீர் உகுத்தனர். "நல்லறமாம் இல்லறம் நம்முடையது; அதைவிட மேலான துறவறம் அவளுடையது" என மனந்தேறி வழிந்தோடியநீரை வழித்தெறிந்தனர். மனம்நிறைந்த அமைதியுடன் தத்தம் இல்லம் ஏகினர்.

இதுநடந்தது 1888-ம் ஆண்டு. சுகபோகத்திலும், நாகரிகதோற்றத்திலும், நானாவித முன்னேற்றத்திலும் ஆழ்ந்துகிடந்த உலகம் இதனைக்காணவில்லை—எப்படிக் காணமுடியும்? மின்சாரசக்தியின் அதிசயவிளைவுகளைக் கண்கூடாகக்கண்டு களிப்புக்கடலில் மூழ்கிக்கிடந்தஉலகம் ஓர் இளம் பாவையைச் சிறைப்பிடித்து அவளை ஒருமடத்திற்கு இழுத்துச் செல்லும் தெய்வஅன்பின் வலிமையை எவ்விதம் கண்டுணரமுடியும்? சமுதாயச் சீர்திருத்தத்தில் — அதன் சர்வரோக நிவாரணியாம் சோஷலிசத்தில் தன்நெஞ்சைப் பறிகொடுத்திருந்த உலகம் பிரார்த்தனையில்—அதன் அபார பலத்தில் தன்முழுநம்பிக்கையையும்வைத்து உயிர்வாழ்ந்த ஒரு சின்னஞ்சிறு பெண்ணைச் சிறிதேனும் பொருட்படுத்துவது எங்ஙனம்? கடவுளைப் புறத்தே தள்ளிப் பூத, பௌதிகசாஸ்திரங்களில் பெரிதும் ஈடுபட்டுச் சடசாத்திரத்தையே எல்லாவற்றிற்கும் மூலகாரணமாகக் கருதிய உலகம், கடவுளின் நேசகரம் பிடித்து, அவருடன் கைகோர்த்து, அவருடைய மார்பகத்தில் தன்முகத்தைப் புதைத்துநின்ற ஒருகாரிகையைக் கண்கொண்டு காணுமா? கருத்தில்தான் கொள்ளுமா?

எவராலும் மதிக்கப்படாமல், யாவராலும் மறக்கப்பட்டு, உலகோர் கண்ணுக்குப்படாமல் மறைந்துவாழ அவள் ஆவல்கொண்டிருந்தாள். அதற்கேற்றாற்போல் அக்காலத்து மனிதரும் அவளைக் கவனியாதிருந்தனர் — பழம்நழுவிப் பாலில் விழுந்தமாதிரி.

இன்று அவள் உயிரோடிருப்பின் 84வயதுநிரம்பியமுதுபெரும் பூவையாயிருப்பாள். அதற்கு மாறாகத் தன்னுடைய 24-வது வயதிலேயே, மாதர் தம்வாழ்க்கையை வாழத்தொடங்கும் பருவத்திலேயே மரணமடைந்தாள். ஆயினும், அவளுடைய மரணநாளிலிருந்தே அற்புதங்கள்பல நிகழத்தொடங்கின. அன்று மறைந்தவாழ்வு வாழ்ந்துவந்த அவள் — பாவத்தை வெறுப்பதுபோல புகழையும் வெறுத்தொதுக்கிய அவள் இன்று மானிடரின்உள்ளத்தைக் கொள்ளைகொண்டுவிட்டாள். உலகின் அன்பைக் காந்தமெனக் கவர்ந்துகொண்டுவிட்டாள்.

இன்று அவளுடைய திருவுருவப்படமோ, சுரூபமோ இல்லாத கோவிலில்லை, வீடில்லை, நாடில்லை, நகரமில்லை, சாதிசனமில்லை. புன்னகை பூத்துக்குலுங்கும் அவளுடைய சோதிமுகம் திரைமறைவின்றி ஆயிரமாயிரம் சுவர்களிலும், மாடங்களிலும் துன்னித்துலங்குகிறது. அன்பொளி வீசும் அவளுடைய இன்பக்கண்கள் உலகினர் எல்லோரையும் கனிவுடன் உற்றுநோக்குகின்றன. அவள் உயிருடன் இருக்கும்போது மடமென்னும் சிறைக்கூடமே அவளுடைய இல்லம். இறந்தபின்னரோ கத்தோலிக்க உலகமே அவளுடைய உறைவிடம்.

அல்லும்பகலும், ஒவ்வொரு நாளும் கணக்கற்றமாந்தர் அவளைநோக்கிக் கூப்பியகரங்களுடன் பிரார்த்திக்கின்றனர். தோலழகிலே தொங்கலாடி மின்னிமறையும் சிற்றின்பத்தில் நாட்டங்கொள்ளும் கட்டிளங்காளையர் அவளுடைய திருப்பார்வையால் தீது நீங்கப்பெற்றுத் தூய்மை அடைகின்றனர். சுத்தர்களின் வேடத்தில்வரும் எத்தர்களின் வலைசிக்காமல் மலர்முகக்கன்னியர் அவளுடைய தூய வாழ்க்கையினை வழிகாட்டியாகக் கொண்டு என்றும்மாறாத, எவரையும் ஏமாற்றாத இறைவனின்பேரன்பில்ஈடுபாடுகொண்டு அவருடைய திருவடிச்சேவையில் பேரின்பம் காண்கிறார்கள். செல்வச் சிறுவர்சிறுமியர் தங்களைப்போல் குழந்தையுள்ளம் படைத்த அவளுடன் தோழமை பூண்டு தத்தம்ஆசைகளைத் தெரிவித்து ஆனந்தம் கொள்ளுகிறார்கள். ஆலைவாய்க் கரும்பென இன்னல்களுக்கிடையே நசுங்குண்டு கனிந்துருகி அவளை நோக்கி அபயக்குரலெழுப்பும் மாந்தர் — அவர் எந்நாட்டவராயினும், எந்நிறத்தவராயினும், எச்சமயத்தவராயினும், எம்மொழியினராயினும்சரியே எல்லோரையும் அவள் ஆதரிக்கிறாள், அரவணைத்துக்கொள்ளுகிறாள்.

உலகைத் துறந்தவள் அவள்; ஆயினும், உலகமே அவளைத் தேடிப் போகின்றது. உலக செல்வாக்கையும், அதன் உல்லாசங்களையும் காலால் மிதித்தவள் அவள்; ஆயினும், உலகமே அவளுடைய பாதாரவிந்தங்களில் வீழ்ந்து அவளை வாழ்த்திவணங்குகிறது. போற்றிப் புகழ்கிறது. அதுமட்டுமா? புதுமைகளில் நம்பிக்கையில்லாத இவ்வுலகை அவள் புதுமைகளால் நிரப்பிப் பொலிவுறச்செய்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச். சூசையப்பர் இன்று உங்களுக்கு......

அன்று அவ்வூர்க் கத்தோலிக்க பாடசாலைப் பரிசளிப்புவிழா. இரவு 8மணி வேளை. கொண்டாட்டங்கள் முற்றுப்பெற்று யாவரும் வீடுதிரும்பிக்கொண்டிருந்தனர். 10 வயதுநிரம்பாதகருணாகரனும், அவன் தங்கையான அருள்சீலியும் தாங்கள்அன்றுபெற்ற பரிசில்களுடன் வீட்டைநோக்கி நடந்தனர். அவர்களின் வதனங்கள் பூரணசந்திரனைப்போல் பொலிவுற்று விளங்கின. ஆனால், அவர்களில் இடையிடையே தோன்றிமறைந்த கவலைக்குறியை எவரும்இலகுவில் காணக்கூடியதாயிருந்தது.

தமையனும், தங்கையும் அன்றைய விழாவைப்பற்றிச் சல்லாபித்தவாறே தெருவின் கோடியை அடைந்தனர். "அருள்சீலி! எமதுதாயின் சுபாவம் தான்தெரியுமே; இன்று நல்லொழுக்கத்திற்கும், கல்விக்குமாக நாம்பெற்ற வெகுமதிகளை என்னசெய்வது? எதுக்கும்நமதுபாட்டியின் ஆலோசனையைப் பெறுவோம்" என்று கருணாகரன் பகர, இருவரும் தமது பாட்டி வீட்டை நோக்கிஏகினர்.

மொனிக்கா ஓர்புரொட்டஸ்தாந்த விதவை. இயற்கையிலேயே கத்தோலிக்கமறையின்மேல் துவேஷங்கொண்டவள். ஆனால், கன்னிப்பருவத்தில் எதிர்வீட்டுச் சத்தியநாதன் என்னும் கத்தோலிக்கவாலிபனைக் காதலித்தாள். சத்தியநாதனும் அவள்பால்காதலுற்று அவளைமணஞ்செய்ய ஆசித்தான். ஆனால், அவன் தாயோ கலப்புமணத்தால்உண்டாகும் சீர்கேட்டைச் சீர்தூக்கிக்காட்டித் தன்னாலியன்றமட்டும் தடுக்கமுயன்றாள். சத்தியநாதன் கேட்டபாடில்லை. மொனிக்கா தனக்குப்பிறக்கும் குழந்தைகளைக் கத்தோலிக்கமறையில் வளர்க்கவேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டுச் சத்தியநாதனின் மனைவியானாள். தனிக்குடித்தனமும் உடனே ஆரம்பமாயிற்று. இத்தம்பதிகளின்மக்களே கருணாகரனும், அருள்சீலியுமாவர். நிபந்தனைப்படியே குழந்தைகளிருவரும் ஞானதீட்சை பெற்றுக் கத்தோலிக்கபாடசாலைகளில் கல்விபயின்றுவந்தனர். சத்தியநாதன் நீடியஆயுளைப் பெறவில்லை. கருணாகரனுக்கு எட்டுவயது பூர்த்தியாகுமுன் நித்தியசம்பாவனையை நாடிவிட்டான்.

கணவனைஇழந்த மொனிக்கா முதல் வேலையாகத் தனது வீட்டை அலங்கரித்துக்கொண்டிருந்த சுரூபங்கள், படங்கள்முதலிய வேதசின்னங்களை நிர்மூலமாக்கினாள். தனதுமக்கள் இருவரும் சத்தியவேத சற்பழக்கவழக்கங்களைக் கைநெகிழ்ந்துவிடவும், புரொட்டஸ்தாந்தமதத்தைக் கைக்கொள்ளவும் தன்னாலியன்றமட்டும் முயன்றாள். பயனில்லை. பிள்ளைகளது மனவைராக்கியத்தின்முன் அவள்முயற்சிகள் விழலாயின. ஆயினும், தங்கள்வீட்டில் பகிரங்கமாய்ச் செபிக்கவோ, அல்லது வேறுபக்திக்கிருத்தியங்கள் செய்யவோ பிள்ளைகளால் இயலவில்லை. அதனாலே அவர்கள் இருவரும் தாம் பெற்ற வெகுமதிகளுடன் பாட்டிவீட்டை அடைந்தனர்.

பேரனும், பேத்தியும் வெற்றிவீரர்களாய்த் தன்னிடம் வருவதைக்கண்ட பாட்டி அவர்களை உச்சிமோந்து முத்தமிட்டு, "கண்மணிகாள்! வாருங்கள்" என்றுவரவேற்று அவர்கள்கொணர்ந்த பரிசில்பொருட்களை ஆராயலானாள். சற்போதனைகளைப் புகட்டக்கூடிய பல வேறுபுஸ்தகங்களும், அர்ச். சூசையப்பரின் அழகியஓர்சுரூபமும், இரண்டு சிறுகத்திரிசால்களும் இருந்தன. பிள்ளைகள்அடைந்த ஆனந்தத்திற்கோ அளவில்லை. ஆனால், இந்தஆனந்தம் மின்னலைப்போல் சணப்பொழுதில் மறைந்தது. அரும்பொருட்கள்தான். ஆனால், வீட்டில் அவைகளைக்கொண்டு போய்ச் சேர்ப்பதோ இலகுவல்ல. மொனிக்காவின்கண்களில் அவைகள் என்றுதென்படுமோ அன்றேஅவைகள் நிர்மூலமாவது திண்ணம். இந்தஎண்ணமே அவர்கள்அடைந்த ஆனந்தத்தை அகற்றியது. அவர்களின் முகவாட்டத்தைப் பாட்டிகண்ணுற்றாள். "கண்மணிகாள்! உங்கள் மனோசஞ்சலத்தை நான் அறிவேன்; நீங்கள்தைரியத்தைக் கைவிடவேண்டாம்; அர்ச். சூசையப்பரை விடாப்பிடியாய்ப் பிடியுங்கள்; அவரைநம்பினோர் ஒருக்காலும் கைவிடப்படார்; அவரிடம்கேட்கும் மன்றாட்டுயாதும் விழலாகாதென்பது உண்மை; இப்பிரபஞ்சத்தில் தமக்கு அன்னபானமூட்டி, உடுத்தாட்டி வளர்த்த தமது அரியகைத்தாதையின் வேண்டுகோளைக் கர்த்தர்ஏற்காமல் இருக்கமுடியுமோ? சூசையப்பரிடம் போங்கள் என்பது ஓர்சுகிர்தமொழி; ஆகையால், செல்வங்களே! அர்ச். சூசையப்பரை விட்டுவிடாதீர்கள்; உங்கள் தாய்அறியாவண்ணம் இச்சுரூபத்தை உங்கள்அறையில் கொண்டுவந்து தருகிறேன்; நீங்கள்பத்திரமாய் உங்கள்பெட்டியில் வைத்துப்பூட்டி ஒவ்வோர்இரவும் சிறிதுஒறுத்தல் முயற்சியாக உங்கள்தாய் நித்திரைக்குப் போனபின் சுரூபத்தைஎடுத்து மேசையின்மேல்வைத்துச் சின்னயேசுவைத் தமது இருகண்விழிகள்போல்காத்துவந்த சூசைமாமுனிவர் உங்களையும் காத்துவரவும், உங்கள்தாய்க்குச் சத்தியமறையின் அருட்சுடர்வீசித் திருச்சபையின் பாதங்களை அவள் வந்தடையவும் உருக்கமாக வேண்டிக்கொண்டு வாருங்கள்" என்று அவர்களைத்தேற்றி வீட்டிற்கனுப்பினாள். வாக்களித்தபடி சுரூபத்தையும் பிள்ளைகளின் அறையில் அவர்களின் தாய்அறியாவண்ணம் கொண்டுபோய்ச் சேர்த்தாள்.

நாட்கள் ஒன்றின்பின்ஒன்றாய் ஓடிமறைந்தன. பாட்டியின் போதனைப்படி இராவேளைகளில்செபிக்கப் பிள்ளைகள் தவறியநாளில்லை. ஓர்இரவு மணிபத்துக்குமேல் இருக்கும். மொனிக்காவுக்கு நித்திரைவரவில்லை. தனதுஅறையிலே கட்டிலில் உருண்டுபுரண்டு கொண்டிருந்தாள். தங்கள்தாயின் நித்திரையின்மையைப் பிள்ளைகள் அறியவில்லை. பெட்டியைத்திறந்து சுரூபத்தைஎடுத்து மேசையின்மேல்வைத்து மெழுகுதிரியை ஏற்றினர். சிறுவரின் அறையில் பெட்டிதிறக்கும் சப்தத்தைக் கேட்ட மொனிக்கா விஷயத்தை அறிந்துகொள்ள அவர்களின் அறையில் புகுந்தாள். மேசையின்மேல் சுரூபத்தையும், அதன்முன் எரிந்துகொண்டிருந்த மெழுகுவர்த்திகளையும், குனிந்தவண்ணம் குவித்தகரங்களுடன் செபித்துக்கொண்டிருக்கும் தனமக்களிருவரையும் கண்டாள். அவள்முகம் பயங்கரரூபத்தை அடைந்தது. கண்கள் கோபத்தின் அனலைக் கக்கின. அன்னையைக்கண்ட மக்கள் அரவத்தைக்கண்டாற்போல் பயந்துபதைத்து நடுங்கினர். தன்மனங்கொண்டமட்டும் பிள்ளைகளை நையப்புடைத்தாள் மொனிக்கா. பிள்ளைகள் அலறவில்லை, கதறவில்லை, குளறவில்லை. யேசுவே! எங்களை இரட்சியும் என்பதைத்தவிரப் பிறிதொருசொல் அவர்கள்வாயினின்று கிளம்பவில்லை. யாவற்றையும் பொறுமையுடன் சகித்தனர். அடிமேல்அடி விழுந்தது. சோர்ந்துதரையில் வீழ்ந்தனர் பிள்ளைகள்இருவரும்.

மொனிக்காவின்கண்கள் சுரூபத்தின் திசையை நோக்கின. சுரூபம்தரையில் எறியப்பட்டுச் சுக்குநூறாகநொருக்கப்படும்எனப் பிள்ளைகள்எண்ணிப் பெரிதும்பதறினர். ஆனால், சுரூபத்தை நோக்கிய தங்கள்தாய் மின்னலால்தாக்குண்டாற்போல் ஸ்தம்பித்துநிற்பதைக் கண்ட மக்கள்இருவரும் ஆச்சரியத்தால் அசைவற்றிருந்தனர். மறுகணம் யாதொன்றும்பேசாமல் தன் அறையினுள்போய்த் தாளிட்டுக்கொண்டாள் மொனிக்கா. அதிசயத்தால் அசைவற்றிருந்த கருணாகரனும், அருள்சீலியும் செய்வது இன்னதென்று அறியாமல் ஒருவரைஒருவர் நோக்கினர். புதுஉற்சாகங்கொண்டு துள்ளிஎழுந்தனர். சுரூபத்தின்முன் முழந்தாளிட்டனர். தங்கள்தாயின் கோரக்கரங்களினின்று அற்புதமாய்த் தப்பியசுரூபத்தை ஆயிரம்முறை முத்தமிட்டனர். அர்ச். சூசையப்பருக்குப் பன்முறை தங்கள் நன்றியைச் செப்பினர். சுரூபத்தைப் பத்திரமாய்ப் பெட்டியில்வைத்துப்பூட்டிப் படுக்கைக்குச் சென்றனர்.

தன் அறையினுள்சென்ற மொனிக்கா சிலநிமிஷம் சித்தப்பிரமைகொண்டவள்போல் அங்கும்இங்கும் உலாவினாள். பிறகு ஓர்சாய்வுநாற்காலியில் சாய்ந்தவாறே அவ்வர்த்த இராவில் செபிக்கும் தன்பிள்ளைகளின் அருங்குணத்தையும், தனதுகொடுந்தண்டனைகளைப் பொறுமையுடன் ஏற்றுக்கொண்ட சகிப்புத்தன்மையையும், அவர்களின் மனத்திடனையும், அச்சுரூபத்தை நோக்கியவுடன் அதனிடம் விளங்கிய எழில்மிகு வசீகரத்தையும் பற்றிச் சிந்தித்தவாறே இராவைக்கழித்தாள். மறுதினமுதல் பிள்ளைகளின் செயல்களுக்குத் தாயினால் எவ்வித இடையூறும் உண்டாகவில்லை. தாயிடம்கண்டமாறுதல் பிள்ளைகளுக்குப் பெரும்பிரமிப்பாக இருந்தது.

இச்சம்பவத்திற்குப்பின் சரியாக ஓர் மாதம். பிள்ளைகள்இருவரும் தத்தம் வகுப்பில் இருந்தனர். இருவரையும் பங்குக்குருவானவர் அழைப்பதாகச் செய்திவந்தது. விரைந்துசென்று அறைவீட்டை அடைந்தனர். அங்கு தங்கள்தாயையும், பாட்டியையும் கண்டதும் பிள்ளைகளுக்கு உண்டான அதிசயம் சொல்லுந்தரமன்று. பிள்ளைகளைக்கண்ட சுவாமியார்: "அருமைமக்களே! **அர்ச். சூசையப்பர் இன்று உங்களுக்கு ஓர்சுபசெய்தியை** அனுப்பியுள்ளார்; உங்கள் தாயிடம் கடந்தஒருமாதமாகக் காணப்படும் நூதனமாறுதலைக்கவனித்து வந்திருக்கிறீர்கள் அல்லவா? பலநிர்ப்பந்தங்கள் மத்தியிலும் உங்கள் சற்பழக்கங்களை நீங்கள் கைநெகிழவில்லை அல்லவா? இதோ! அதன்பலாபலன்; அர்ச். சூசையப்பரின் அருளால் வருகிறபுதன்கிழமை உங்கள்தாய் சத்தியமறையில் ஏற்றுக்கொள்ளப்படுவாள்" என்றார். பிள்ளைகள் இருவரும் திக்பிரமைகொண்டவர்போல நின்றனர். அவர்களின் நேத்திரங்களில் ஆனந்த நீர் சுரந்தது. அவர்களின் அதரங்களோ "அர்ச். சூசையப்பரை அண்டிப்போவோர், அபசெயமடையார்" என்று முணுமுணுப்பதுபோல் அசைந்தன.

---

அவள் உயிரோடும், உடலோடும் இந்நிலப்பரப்பில் நடமாடியபோது பிணியாளரைக் கண்காணிக்கவில்லை. மாணுக்கருக்குப் பாடம் புகட்டவில்லை. பிரசங்க மேடை ஏறவில்லை. சொல்மாரி பொழியவில்லை. இலக்கியம்ஒன்றேனும் பிரசுரம் செய்வதற்கென்று இயற்றவில்லை. இருந்தபோதிலும் அன்பின்கைதியாய், கற்புக்கரசியாய், கள்ளமில்லா உள்ளத்தினளாய், செந்நெறியின் சிகரமாய் ஒழுகிவந்தஅவள் இன்று மக்களிடையே அரும்பாடுபட்டுவரும் சேவகிகளில் மிகச்சிறந்தவளாகவே காட்சியளிக்கிறாள்.

அவள் ஓர் புனிதத்துறவியான தடாகத்தில் தன்னை மறந்த அன்னப்பறவை. மறைந்துவாழ்ந்த பொன்வண்டு. புதுமைவரம்படைத்தபூம்பாவை. புதுவழிசமைத்த பூங்கோதை. அகிலத்தைவென்ற வீரநங்கை. அவளே நமதுநேயச்சிறுமலர் — பாலயேசுவின் பக்தை — வாலயேசுவின் பத்தினி புனிதகுழந்தை தெரேசம்மாள்.

## நாளுசங்கதிகள்

● தென்னிந்தியாவிலே கேரளநாட்டிலிருந்து ஐக்கியஅமெரிக்கதேசத்துக்குப் பச்சைநிறத்தவளைகள் மிக ஏராளமாக ஏற்றுமதியாகின்றன. இந்தத்தவளைகளின் கறியை அமெரிக்கர் விரும்பிச்சாப்படுகின்றனர். ஒருறாத்தல் தவளைக்கறியை அவர்கள் ஒன்பதுரூபாகொடுத்து வாங்குகின்றனர். தவளைகளின் ஏற்றுமதியால் இந்தியாவுக்கு வருடம்ஒன்றுக்கு 30 லட்சம் ரூபா வெளிநாட்டுச்செலவாணிகிடைக்கிறது.

● மூன்றாவதுசெய்மதி — அதாவது செயற்கைச்சந்திரனையும் சோவியற்ரூஷியா சென்ற 15-ந்திகதியன்று வானவெளியில் பறக்கவிட்டிருக்கிறது. இதற்குமுன்ரூஷியா பறக்கவிட்டஇரு செயற்கைச் சந்திரன்களை விட இது நிறையிலும், பரிமாணத்திலும் பெரியதாகும். இது பூமியிலிருந்து 1,175 மைல்உயரத்திலே 106 நிமிஷங்களுக்கு ஒருமுறை பூமியைச்சுற்றி வருகின்றது.

● மிகமிகச்சக்திவாய்ந்த எரிபொருள்ஒன்றை அமெரிக்கஅரசாங்கம் நயகரா நீர்வீழ்ச்சிப்பிரதேசத்தில் உற்பத்திசெய்யத் தொடங்கியிருக்கிறது. வெடிகுண்டுவிமானங்களும், ரொக்கெற்போன்றஎறிஆயுதங்களும் அதிகம்வேகத்திலே நெடுந்தூரத்துக்குச்செல்ல இந்தஎரிபொருள் பயன்படுமாம். இது உலகிலேயே முதன்முறையாக இப்பொழுதுதான் செய்யப்படுகின்றதாம்.

● இஸ்ரேயேல்இராச்சியம் — அதாவது யூதநாடு உருவாகிய பத்தாவது ஆண்டு நிறைவுதினம் சென்ற 15-ந்திகதி வந்துபோயிற்று. இந்தத்தினத்தை ஐக்கியஅராபிய குடியரசுநாடுகளான எகிப்தும், சிரியாவும் ஓர்துக்கதினமாகக்கொண்டாடின. அன்று நாடுமுழுவதும் ஐந்துநிமிஷநேர மவுனம்அனுட்டிக்கப்பட்டது.

● பாகிஸ்தான் சிவில்விமான சேவையைச்சேர்ந்த விமானம்ஒன்று சென்றவியாழக்கிழமைஇரவு புதுடில்லியிலே பாலம்விமான நிலையத்திலிருந்து மேலெழுந்த சிலநிமிஷத்துள் கீழேஅடித்துக்கொண்டுவிழுந்து அறவேஎரிந்துநாசமாயிற்று. இந்த விபத்தின்விளைவாக 21பேர்கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. விமானத்தில் 32பிரயாணிகளும், 6 விமானிகளுமிருந்தார்கள்.

● நான்கு எஞ்ஜின்கள் பூட்டிய பெல்ஜியஆகாயப்பிரயாண விமானம் ஒன்று சென்றஞாயிற்றுக்கிழமை வடஆபிரிக்காவைச்சேர்ந்த கசபிளாங்கா நகரில் இறங்கியபோது அடித்துக்கொண்டுவிழுந்த காரணமாக 65பேர் கொல்லப்பட்டார்கள். அதிற்சென்ற பிரயாணிகள் 60பேருள் 56பேரும், 9 விமானிகளில் ஒருவருமேதப்பாது எல்லோரும் உயிரிழந்தார்கள்.

● விரைவிலேமனிதன் சந்திரனுக்குப் பிரயாணஞ்செய்யலாமென்று இதுவரை இருந்துவந்த நம்பிக்கையானது ரூஷியசெய்மதிகள் மூன்றிலிருந்தும் கிடைத்துள்ளதகவல்களால் குன்றிவிட்டதென்பதைச் சோவியற்விஞ்ஞானிகள்பொதுவாகத் தற்போது ஒப்புக்கொள்வதாகத் தோன்றுகிறது. ஆனால், மனிதன் இப்போதுதானும் சந்திரனுக்கு "ரொக்கெற்"எனப்படும் ஆகாயபாணத்தை அனுப்பிவைக்க முடியுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தியின் பயிற்சிப் பாடசாலை பரிசுத்த செபமாலை

(பரிசுத்த செபமாலைப் படையணிப் பிரசுரம்)

திவ்வியபூசைப்பலிக்கு அடுத்தபடியாக அதிவிலையேறப்பெற்றதும், மிகுந்த பலாபலன்கள்நிறைந்ததும், இலகுவ்மானசெபம் திருச் செபமாலையே. ஆனால், ஓர்நிபந்தனையில்தான் செபமாலையின்வல்லபம் வேரூன்றிநிற்கின்றது. அதைச்சரிவர உய்த்துணர்ந்து, நடைமுறைவாழ்க்கையில் சட்டவட்டமாகச் செயற்படுத்த முயல்வோருக்கே திருச்செபமாலையிலிருந்து தேனமிர்தமும், தேவாமிர்தமும் ஒருங்கே சுரக்கின்றன. அந்தோ! நாம் எம்மைச்சுற்றிக்காண்பது என்ன விபரீதம்! என்னபரிதாபம்! அறியாச்சிறுரின் அங்கைப்பட்ட தங்கக்காசுபோல் வியர்த்தமாகின்றதே செபமாலை! ஓர்திருந்த வாடிக்கைவழக்கமான கடன்வழியாய்விட்டதே செபமாலை! தேவசம்பந்தமான சிந்தனைகளில் மனஏகமாய் ஈடுபடுவதற்குப்பதிலாக விருதாவில் அலைந்துகொண்டு திரிகின்றதே! அநேகமாய் அறவே உற்சாகமற்று, உயிரோயற்று எப்போதுமுடியுமென்ற தீவிரகெதியில் அதுஉருட்டித் தள்ளப்படுவதைக் காண்கிறோம். பொதுவிலே கூறுமிடத்து, ஆன்மலாபசிரத்தை அணுவத்தனையும்இன்றி லோகாயத சலுகைகள் பெறுவதையே ஏகநோக்கமாகக்கொண்டு அதுசொல்லப்படுவதை மறுக்கத்துணிவார் முன்வரட்டும்! இந்தமனப்பான்மையுடன் செபமாலை சொல்லிவிட்டு, ஒருநற்பலனும் காணவில்லையேயென்று குறைகூறி மனஞ்சோர்வது முறையாகுமா? இது புத்திக்கொவ்வாத மௌட்டீகமன்றோ!

எல்லாம்அடங்கிய ஓர்பொதுஇலக்குடன் கடவுளைப்பற்றியும், தான் அடைந்துகொள்ள ஆசிக்கும் கடாட்சங்கள்பற்றியும் எண்ணியவாறே செபமாலைசொல்லுதல் நற்செபத்திற்குப் போதுமென்று பலரும்அபிப்பிராயப்படுவது ஓரளவில் சரிதான். ஆனால், செபமாலையின் சகலபலாபலன்களையும் தீர்க்கசப்பூரணமாக அடைந்துகொள்ள ஆசிக்கும்ஒருவர் சற்றேசிந்திப்பாராகில் அவர்செபிப்பது ஒருமுழுச்செபமாலையின் மூன்றிலொருபாகம் மாத்திரமேயென்று கண்டுகொள்ளலாம். இந்த மூன்றில் ஒருபாகத்தில் அடங்கியுள்ள ஐந்துஇரகசியங்களைத் தன்மனத்திரையில் ஓடவிட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்ற நிபந்தனை அத்துணைகஷ்டமானதல்ல என்பதையும் தெரிந்துகொள்ளலாம். களிகூர்ந்த, துயரூர்ந்த, மகிமைப்பிரதாபமார்ந்த இப்பேர்இரகசியங்கள் யேசுவினதும், அவர் திருத்தாயாரினதும் வாழ்க்கைவரலாறுகள் யாவையும் முற்றுகப் புதிர்க்கதிர் (X-ray) கொண்டு படம்பிடித்துக் காட்டக் கண்டானந்தங்கொள்ளலாம்.

திருச்செபமாலையில் புனைந்துள்ள பதினைந்து பரமஇரகசியங்களும் முத்தொகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன. எனினும், இவைகள்அனைத்தும் எமது இரட்சணியத்தின்பாற்பட்ட மூன்று மகாபரமஇரகசியங்களின் விவிதமுக விசித்திரபிழம்புப்(Perspective)படக் காட்சியேயாம். தேவனின் மனுஷாவதாரம், பாவப்பரிகார பிராயச்சித்தம், நித்தியபரமானந்த சீவியம்எனும் மூன்றுமே முன்சொன்ன மகாபரமஇரகசியங்களாகும்.

மங்களஞ்சொன்ன இரகசியம், மினவுதற்பரமஇரகசியம், திருப்பரன் பூவில் உதித்த இரகசியம், கோவிலில் அவரைக் காணிக்கையாகக் கொடுத்து மீட்டஇரகசியம், வேதபாரகர்நடுவில் யேசுவைக்கண்டுபிடித்த இரகசியமாகிய ஐந்துகளிபேருவகைகளுமே அவதார மகா பரமஇரகசியத்தின் துணை அங்கங்களாகும்.

பூங்காவில்ஏங்கி உதிர வியர்வை வேர்த்ததும்—கசைடிகளாற் தசை கிழிந்ததும்—முட்களால் முடிபுனையப் பெற்றதும்—கழுமரத்தைத் தோளிற் சுமந்ததும்—சிலுவையில் அறைந்தேற்றியதுமாகிய வெவ்வேறுன அவதிப்பாடுகள் பரிகாரபிராயச்சித்த மகா பரமஇரகசியத்தை அறிவுறுத்துவனவாகும்.

நித்தியபரமானந்த சீவியமாகிய மகாபரமஇரகசியத்தின் சகாம்சங்களாவன: ஆண்டவரானயேசுவின் திருஉத்தானமும்—மோட்சாரோகணமும்—தூயஆவியானவரின் அவரோகணமும்—மரியன்னையின் ஆரோபணமும்—அம்மாதாசி பரலோகஇராக்கினியாக முடிசூடிய வைபவமுமாம்.

திருச்செபமாலைச்செபம் ஓர்விசுவாசப்பிரகரணமாகத் திகழ்கின்றது. ஓர் மானசிக மந்திரமாக மட்டுமன்று, ஆனால், யேசுவின்சீவாப்சத்தோடு ஒட்டியிணைந்த உறுதியான விசுவாச முயற்சியாகவும் செயல்முறையில்நிகழ்கின்றது. எங்கள்நாயகன்யேசு தம் தாயகப்விட்டிரங்கிவந்து மனுமக்களிடையே வாசம்பண்ணினுர்; நம்மைத் தமதுபரமபிதாவின்வீட்டிற்கு அழைத்துச்செல்லும்படியாகவே மோட்சத்துக்கு ஆரோகணமாயினுர் என்னும் மூலாதாரசத்தியங்களை முழுதும்துலங்கவைக்கின்றது.

திருச்செபமாலை ஓர்தியானசம்பிரதாய செபம். இம்மேரையில் திருச்செபமாலை ஒப்பற்ற ஓர்தியானபாடகூடமாய்நிலவும். எவ்வாறெனில், அதன்மூலம் நாம் வாய்ச்செபத்திற்கு மேல்எழுந்த, படிப்படியாக அடிமேலடிவைத்து ஏறிநடக்க இயலுகின்றது. தியானவரம்பையும்கூடக் கடந்துசெல்லும் ஆற்றல்உண்டாகின்றது. வான்முகட்டைத் தாவிப்பிடிக்க முயற்சிக்கும் சிலபறவைகள் சங்குப்புரியொத்த வட்டகாரமுறையில் வளைந்து வளைந்து பறக்கின்றனவே. இம்முறையான இயக்கத்திற்கே இணையிட்டனர் ஆதிவேதசாஸ்திரிகள், தியான சம்பிரதாயத்தை மேற்கொண்டு தாவி உயரும் ஒருஆன்மாவின் அயனங்களையும். இவ்விதமே களிகூர்இரகசியங்கள் திருப்பாடுகளுக்கும், பாடுகள் மோட்சபாடம்மட்டுக்கும் நம்மை இட்டுச்செல்லுகின்றன. ஆகவே,தெள்ளியவிளக்கத்தோடு சொல்லும் செபமாலைக்கு மிகமிகஉயர்ந்த நவமணியும் இணையாகாது. ஏனெனில், இதனால் வேதசத்தியங்கள் அத்தனையுமே நமது சீவதாதுக்களுடன்இலகுவாக லயித்துவிடுகின்றன.

மேலும், செபமாலைச்செபமானது சாதனமுறைச் செய்கருமஅனுபவத்திற்கு இயைந்துபோகின்றது. எவ்வாறெனில். அது ஆத்மீக, லௌகீக சன்மார்க்க நீதிநெறிகளை ஒருங்கேதொழிற்படுத்துகின்றது இந்த நீதிநன்னெறிகள் யாவும் யேசுமரிஎன்னும் ஆட்களிலும், அவர்கள் வாழ்க்கையிலும் தத்ரூபஉண்மைகளாய்ப் பரிணமிப்பதை மலையுச்சிக் காட்சிபோன்று பிரத்தியட்சமாக்குகின்றது. ஆகவே, செபமாலைச்செபத்தில் பொதிந்துள்ள பெரும்இரகசியங்கள் எமதுவாழ்க்கையிலும் பிரதிபலிக்க வேண்டும். ஒவ்வோர்இரகசியமும், ஒவ்வோர்விசேஷ தர்மநெறியைக் கற்பிக்கும் பொருட்பாடமேயாகும். அவற்றில் முக்கியமானவைகள் தாழ்மை, பொறுமை, நம்பிக்கை, நேசம் என்பனவே.

தேவனைநோக்கி நாம் முகம்வைத்து நடக்கும்பாதையில் மூன்றுதெல்லுக்கள் தென்படும். நமது ஈருந்தகதியின் அறிவுவந்து தேறுவது முதலாம்தெல்

(தொடர்ச்சி 8-ம்பக்கம்)

# மாடு மடம்மாறிச் சென்றது ஏன்? மாதவனின் திருவருளாலா!

— V. M. Joseph —

பிரான்ஸ் தேசத்திலுள்ள எவ்றே நகரமேற்றிராணியார் சென்றமகாயுத்தத்தின்முன் தமதுமேற்றிராசன விசாரணைப்படங்குளொன்றிலே நடைபெற்ற ஓர் சம்பவத்தைப் பின்வருமாறு அறியத் தருகின்றார். சத்துருபடைகளின் குண்டுவீச்சுகளால் இடிந்து தகர்ந்துபோன எவ்றேநகர "வறியவர்களின் சிறியசகோதரிகள்" மடம் திருப்பக்கட்டப்படவில்லையாயினும். அதனைக்கட்டுவதற்கு அவர்களை உற்சாகப்படுத்துமாறு சிலசமையங்களில் தெய்வாதீனமாக அவர்கள் எவ்வாறு பராமரிக்கப்படுகின்றார்கள்என்பதை இச்சம்பவமூலம் அறிவிக்கின்றார்.

இந்தநகரத்துக்கு அண்மையிலுள்ள கார்மேல்மடத்திற்கு ஓர் சீமாட்டி அடிக்கடி போவதுவழக்கம். ஓர்நாள் அந்தமடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த அர்ச். சூசையப்பர் திருச்சுரூபத்தின் கழுத்திலே ஓர்பசுவின்படம் கட்டித் தொங்கவிடப்பட்டிருப்பதை அவள் கண்டதும் வியப்புமேலிட்டவளாய்ச் சிரேஷ்டதாயாரிடம்சென்று காரணத்தைவினவ, தாயார் உத்தாரமாக: மடத்தில்வளர்த்த பால்கறக்கும் பசு ஒன்றைக்கொல்ல நேர்ந்துவிட்டதென்றும், அந்தப்பசுவிற்குப்பதிலாக வேறொன்றைத் தந்தருளும்படி அர்ச். சூசையப்பரைக் கேட்கும்நோக்கமாகவே அப்படம் அவர்கழுத்தில் தொங்கவிடப்பட்டிருக்கிறதென்றும் விடை பகர்ந்தார். அதற்குச்சீமாட்டி "இந்த அருமையான அர்ச்சியசிட்டரை இப்படி நடத்தினீர்களென்றால் நீங்கள் கேட்பதைப் பெற்றுக்கொள்வது சாத்தியமாகுமென்று நான் நம்பமாட்டேன்; இதற்குப்பதிலாக வருத்தமாயிருக்கும் எனதுபேரப்பிள்ளை சீக்கிரம் சுகமடையவேண்டுமென்று மன்றாடுங்கள்; அப்பிள்ளை சுகமடைந்ததும் நீங்கள்ஆசித்தபடி ஒருமாடு உங்களுக்கு அன்பளிப்பாகக்கொடுப்பேன்" என்று வாக்குப்பண்ணினாள். இவ்வாறு சீமாட்டிசொல்லி மடத்தைவிட்டுப்போனதும் நேரே ஒருமாட்டு வியாபாரியிடஞ்சென்று அவரிடம்விற்பனைக்கிருந்த கறவைப்பசுக்களுள் மிகவும்நேர்த்தியானஒன்றைக் கார்மேல் மடத்திற்கு அனுப்பும்படி உத்தரவிட்டு, அதன் பெறுமதியைத் தான் கொடுப்பதாக வாக்குப்பண்ணிச்சென்றாள்.

மாடு தங்களுக்குக் கிடைத்ததைக் குறித்து மடத்துச் சிரேஷ்டதாயார் தனக்கு அறிவிப்பாரென்று சீமாட்டி பலநாள் காத்திருந்தும் ஒருதகவலும் கிடையாததால் காரணத்தை அறிய விரும்பி ஒருநாள் மடத்திற்குச் சென்றாள். தன்னைச்சிரேஷ்டதாயார் மிகவும் அன்புடன் வரவேற்றும் தாம் அனுப்பிய மாட்டைப்பற்றி ஒன்றும் கூறாதிருந்தபடியால், சீமாட்டி: "மாடு நன்றாய் நிற்கின்றதா?" எனத் தாயாரிடம் வினவினாள்.

தாயாருக்கோ ஒன்றும் புரியாதபடியால் "எந்தமாட்டைப்பற்றிக் கேட்கின்றீர்கள்?" என்று விசாரித்தார். அதன்மேல்தான் "அந்த மாடு இன்னும்உங்களிடம் வந்துசேரவில்லையா?" என்றுகேட்டுத் தான் மடத்திற்கனுப்பும்படி ஏற்பாடுசெய்த மாட்டைப்பற்றிக் கூறினாள் சீமாட்டி.

அதுவந்து சேரவில்லைஎன அறிய வந்ததும் சீமாட்டி உடனேதானே மாட்டுவியாபாரியிடம்சென்று தான் கேட்டுக்கொண்டபடி மாட்டை என்ன காரணத்திற்காக மடத்திற்கு அனுப்பவில்லையென்றுகேட்க, வியாபாரி: "பிறர்மூலம் மாட்டை மடத்திற்கனுப்ப மனம்வராதபடியால், நானே நேரில் கொண்டுபோய் அதைமடத்தில்சேர்த்துவிட்டு வந்தேனே; எவ்வாறு மாடு அங்கில்லாதுபோகும்?" என்று பிரமிப்போடு பகர்ந்தான். "எந்த மடத்திற்குக் கொண்டுபோனீர்?" என்று சீமாட்டி வினவ, "வறியவர்களின் சிறியசகோதரிகள் மடத்திற்குத்தான்" என்று விடையிறுத்தான் மாட்டுவியாபாரி.

## இது யாருடைய மாடு?

இந்தச் சம்பாஷணை நிகழ்ந்த அரைமணி நேரத்துள் சீமாட்டி வறியவர்களின் சிறிய சகோதரிகள் மடத்திற்குச் சென்று "சில தினங்கட்கு முன் ஓர்மாடு உங்கள் மடத்திற்குக் கிடைத்ததா?" என்று அந்தமடத்துச் சிரேஷ்டதாயாரிடம் விசாரித்தாள். தயார் இதைக் கேட்டதும் மிகுந்த அக்களிப்புடன் "ஆம், அன்று புதன் கிழமை இந்தமாடு எங்கட்குக் கிடைத்தது; நாங்கள் அதை 'அர்ச். சூசையப்பரின் மாடு' என்று அழைப்போம்; இது கிடைத்தது ஒருபெரும புதமை; நாங்கள் பராமரிக்கும் வயோதிபர்களுக்குக் கொடுக்கப் பால் பற்றுதபடியால் அர்ச். சூசையப்பரை வேண்டிக்கொண்டோம்; அவரே இந்த மாட்டை எங்கட்கு அனுப்பியிருக்கின்றார்; இந்தமாடு கிடைக்க நாங்கள் பலதினங்கள் காத்திருக்கவில்லை; அர்ச். சூசையப்பரின் கழுத்திலே ஓர் மாட்டின் படத்தைத் தொங்கவிட்டிருந்தோம்; உடனே எங்கள்மன்றாட்டுக் கேட்கப்பட்டது" எனச் செப்பினர்.

இதை அவதானமாகக் கேட்டுநின்ற சீமாட்டி: "தாயாரே! இந்த மாடு உங்கட்குச் சொந்தமானதல்ல; நானே இதைக் கார்மேல் மடத்துக் கன்னியர்களுக்குக் கொடுக்கவென்று வாங்கினேன்; மாட்டு வியாபாரியின் கவலையீனத்தால் இவ்வாறு நேர்ந்திருக்கின்றது" என்று சொன்னாள். இதைக்கேட்ட தாயார் கவலையுடன் "அப்படியென்றால் எங்கள் ஏழை வயோதிபர்கள் பழையபடி பாலில்லாமல் இருக்க வேண்டியது தானே?" என்று கூறினர் இதைச் செவிமடுத்த சீமாட்டியின்மனம் பாகாய் உருகித் "தாயாரே! அப்படி நடப்பதற்கு நான் ஒருகாலும் சம்மதிக்கமாட்டேன்; அர்ச். சூசையப்பர் தானே இந்தமாட்டை உங்கட்கு அனுப்பியிருக்கிறார்; அதை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்; நான் வேறொருமாட்டை வாங்கிக் கார்மேல் மடத்திற்குக் கொடுக்கிறேன்" எனக் கூறித் தாயாரிடம் விடைபெற்றுச் சென்றாள்.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பரிசுத்த சதாசகாயமாதாவிடமும், அர்ச். அந்தோனியாரிடமும் கேட்டமன்றாட்டுகள் கிடைக்கப்பெற்றேன். நன்றியாக இதனைப்பிரசுரிக்கிறேன்.

ஓர் பக்தன்

* * *

முத்திப்பேறுபெற்ற மாட்டின் தெபோரசே! உமக்கு எங்கள்மேலான நன்றி ஸ்துதியைச் சமர்ப்பிக்கின்றோம். எங்கள்மகன் எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்திஎய்துமாறு உம்மை வேண்டினோம். பெற்றுத்தந்தீர். நேர்த்தியின்படி இதனைப்பிரசுரிக்கின்றோம். இன்னும் எமக்கும், பிள்ளைகளுக்கும் வேண்டியநன்மைகளைஎல்லாம் நல்லஆண்டவரை மன்றாடிப்பெற்றுத்தருமாறு உம்மை இரந்து வேண்டுகின்றோம். மேலும் பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார்இவர்களுக்கும் எங்கள்நன்றி உரித்தாகுக. இவர்களின் நாமம் எங்கும்என்றும் எவர்மத்தியிலும் புகழப்படுவதாக. S. S.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே !

தூயஆவியானவர் உலகத்தில் எழுந்தருளியதை ஞாபகப்படுத்தும் திருநாளில் அவர் எமக்கு என்னஉதவி செய்வார் என்பதைப்பற்றி ஒருவர்எழுதிய கடிதத்தைப் படியுங்கள்.

"நான் ஞானச்சீவியத்தில் உயர்வுஅடையப் பலஆண்டுகளாக முயற்சித்தேன். சிலசமயங்களில் நான் வெற்றிகாண்பது போலிருக்கும்; பின்பு மனச்சோர்வு உண்டாகி, குற்றங்கள் பெருகுவது போலிருக்கும். சின்ன மலரை மோட்சத்திற்குஉயர்த்தியஅன்பும், தேவனில் நம்பிக்கையும்சேர்ந்த ஞானப்பாலத்துவ வழியைஅடைய ஆசையுற்று அடிக்கடி வேண்டினேன்.

"அடிமைப்பய மனப்போக்கு என்வழியை மறித்தது. ஞானப்பாலத்துவத்திற்காக நான்செய்த செபமெல்லாம் பலனற்றது போன்றிருந்தது. அப்பொழுது எனக்குஒரு நூதனமான வருத்தம் வந்தது. அதை வைத்தியர் ஆராய்ந்துஅறிய வெகுகாலஞ்சென்றது. அது மாமிசகண்டத்துடன் சார்ந்தது. எனக்குஇன்னும் அது நூதனமாக இருக்கிறது.

"நான் அனுபவித்த கஷ்டத்தின்குணம் என்னவெனில், பலதொல்லைகள் உள்ளவேளை மனம் குழம்பிவிடும். நல்ல முடிவெடுப்பதற்கு அவசியமான புத்தித்தெளிவு தேவைப்பட்டவேளை, சிறப்பாக அது ஞானச்சீவியத்தைச் சார்ந்திருந்தால் தெளிவாயிருந்ததெல்லாம் கலங்கிவிடும். நொய்மையான மனச்சாட்சி யிருந்தபடியால் அவையெல்லாம் பாரமானசுமையாக முடியும். எவ்வளவு தெளிவான முடிபைத்தேடினேனோ, அவ்வளவு குழப்பமே ஏற்பட்டது.

"ஓர்நாள் பிரச்சினை ஒன்றைப்பற்றி ஆராய்வதை விடுத்து, என்புத்தியைத் தெளிவுபடுத்துமாறு தூயஆவியானவரை வேண்டிக்கொண்டேன். சிலநாட்கள் சென்றன; தொடர்ந்து வேண்டினேன். ஆராயமுயற்சிக்கவில்லை. சடுதியில் என்மனதில் ஓர்தெளிவு; பிரச்சினையைத்தீர்க்கத் தெளிவான வழி; கலக்கமின்றி முடிபுசெய்தேன்.

"ஞானப்பாலத்துவம் இதுவேதான் எனஉணர்ந்தேன். செபம், தளராத நம்பிக்கை, தன்நம்பிக்கையின்றித் தூயஆவியின் வழிநடாத்துகையில் எல்லையற்ற நம்பிக்கை. மனஅமைதியுடன் தேகசுகமும் திருந்தியது ......"

சுயநம்பிக்கையை முற்றாய்விடுத்து, எமது வாழ்க்கையில் உள்ளஇருளைத் தெளிவுபடுத்தச் சத்தியஆவியானவரில் பூரணநம்பிக்கை கொள்வதே ஞானப்பாலத்துவம் எனஉணருங்கள்.

அண்ணா.

—*—

## பாதையிற் கண்டெடுத்த பணப்பெட்டி

(சென்றவாரத் தொடர்ச்சி)

சிறிதுவேளை சென்றதன்மேல் அவ்விருந்தாடிகளில் விருத்தாப்பியரானவர் தம்மோடுகூடவந்த தம்முடையவேலைகாரனைநோக்கி, "எமக்கு இந்தப்பாதை எப்போதுமேகெடுதியாய் இருந்துவருகிறது. சில வருடங்களுக்கு முன்னர் இப்பாதைவழியாகப் பயணஞ்செய்தபோது ஓர் பெருந்தொகைப்பணத்தை இழந்துபோயினேன். இன்றிரவு கடுங்குளிராலும் பசிக்களையாலும் பாதிக்கப்பட்டு வருந்தவேண்டியவனானேன்" எனக்கூறினர்.

இவ்வார்த்தைகள் சமீபத்தில் யாதோ அலுவலாய்நின்ற கமக்காரனின் செவியில்விழவே, அவன் அவர்கள்பக்கமாக விரைந்துசென்று "இந்தப்பாதையிலே ஓர்முறை நீங்கள் ஏதோபணத்தை இழந்ததாகச் சொன்னீர்களே. அதுமெய்தானா?" என்று ஆவலுடன் விசாரித்தான்.

"ஆம், அப்பணத்தை இழந்தபடியால் சிலகாலமாகப் பணமுட்டுண்டாய் வியாபாரம் நடத்துவதில் நான் பெரிதுஞ் சங்கடத்துக்குள்ளானேன்" என்றார் அவ்வயோதிகர்.

அப்போது கமக்காரன், "அந்தப் பணம் என்னத்திலே வைக்கப்பட்டிருந்தது?" என்று அவரைக்கேட்டான். "தோலால் சுற்றப்பட்ட ஓர் மகோக்கனிப்பெட்டியில்" என்றார் வயோதிகர். "லூசியன்! நீ அப்போது கண்டெடுத்த பெட்டியைப் போய் எடுத்துக்கொண்டுவா. அது போசனபாத்திரங்கள் வைக்குந்தட்டிலே இருக்கிறது"என்றான் கமக்காரன். லூசியனும்சென்று பெட்டியை எடுத்துவந்ததும், "ஐயா! தற்போது இப்பெட்டி வெறுமையாக இருக்கிறது. ஆனால், இந்த வீடும், ஏக்கர்கணக்கான இந்தநில முழுவதும் உமக்கே சொந்தமானவை. இந்தப்பெட்டியின் சொந்தக்காரனை எப்போதாவது நான் கண்டறியுமிடத்து, அவரிடம் ஒப்படைத்துவிடும் நோக்கத்துடனேயே அதிலிருந்த பணங்கொண்டு இவைகளை வாங்கினேன். இந்தப்பாதைக்கு அப்பாலுள்ள எனதுகுடிசை இன்னமுமே எனக்குச் சொந்தமாயிருக்கிறது. அதனால், நான் எனது குடும்பத்துடன் திரும்பவும் அதிற்போய் வசித்து, கமவேலைகளைவிட்டு முன்போலக் கூடைகள் இழைத்துப் பிழைத்துக்கொள்வேன். விலைபெற்ற ஓர்பொருளைப் பாதையிலே நான் கண்டெடுத்ததாக அப்போது ஓர் பத்திரிகையில் விளம்பரஞ் செய்திருந்தேனே. உடனே நீர்வந்து உம்முடையபொருளை ஏன் பெற்றுப் போகவில்லை?" என்றான் கமக்காரன்.

"அப்போது தாமதித்திருந்து பத்திரிகையைப்பெற்றுப் படித்துப் பார்க்க எனக்குச் சாவகாசம் இல்லாமற்போய்விட்டது. ஏனெனில், நியூயோக் நகருக்குப் பிரயாணப்படவிருந்த ஓர்கப்பலில் ஏறவேண்டி ஹாவர் துறைமுகத்துக்கு விரைந்து சென்றுகொண்டிருந்தேன். அங்கே எனது குடும்பத்தினர் என்னைக் காத்துக்கொண்டு நின்றார்கள். நியூயோக்நகர் போய்ச்சேர்ந்ததும் மற்றுமோர் பெருங்கஷ்டமுண்டாய் அது நான் பணம்இழந்ததை மறக்கும்படி செய்துவிட்டது. எனது மனைவி நோய்வாய்ப்பட்டுவிழுந்தாள். அவளைத்தொடர்ந்து எனது புத்திரியும் கடினநோய்கண்டு வருந்தினாள். வியாபாரமுயற்சிகளும் என்னை அங்கே இருவருடம் தாமதிக்கச்செய்தன. மறுபடி நான் பிராஞ்சு தேசம் திரும்பியதும் நான் அப்போது இழந்துபோன பணப்பெட்டியைத் தேடியலைவதில் யாது நன்மையும் வரமாட்டாதென்றே நினைத்தேன். அதனால் அதைப்பற்றி நான் யாதொன்றும் செய்யவில்லை. இந்தப்பாதைக்கப்பாலுள்ள குடிசை இன்னமுமே உனக்குச் சொந்தமாயிருப்பதாகவும் அதிலே உனது குடும்பத்துடன் திரும்பவுஞ் சென்று வசிக்கப்போவதாகவும் சொல்லுகின்றாயே. அவ்வாறு செய்ய உன்னைவிடமாட்டேன். எனக்குள்ள செல்வமோ என்னுடைய தேவைகளுக்குக்கண்டு எவ்வளவோ மேலதிகமாயிருக்கிறது. உனது நேர்மையையிட்டு நீ சம்பாவனைக்குப் பாத்திரவானாயிருக்கிறாய். இந்தக் கமமும், வீடும் உனக்கே சொந்தம். இவைகளை உனக்கே உபகாரமாகக் கையளிக்கிறேன் என்றார் அந்த விருத்தாப்பிய பிரயாணி. அவ்வாறு சொன்னதும், நன்றியறிதலான வார்த்தை எதனையுமே அவனிடமிருந்துகேட்க விரும்பாதவராய் மேசையின் பக்கமாகச்சென்று தமக்குச் சித்தஞ்செய்யப்பட்டிருந்த போசனத்தைச் சந்தோஷத்துடன் சாப்பிட்டார். மறுநாட்காலை அவர் எழுந்து அவனுடைய சுகசேமங்களை விசாரிப்பதற்காகத் தாம் இடையிடையே அங்கு வந்து போவதாக வாக்களித்து, அவனுக்குச் சகலவித சுகவாழ்வுகளும் உண்டாகுக வென்று ஆசிமொழிகூறிச் செல்லலாயினர்.

அந்தநேர்மையுள்ள கமக்காரனோ அக்கமத்துக்கும், வீட்டுக்கும் தானே முறையான சொந்தக்காரனாய் வந்ததுபற்றிச் சந்தோஷமுற்று, சாதுரியமாகத் தனது முயற்சிகளைப் பார்த்து ஓர் காலம் அந்நாட்டிலே பெரியவோர் செல்வந்தனாய்ச் சிறந்திருந்தான்.

—*—

## கிறீஸ்துவ சகோதரர்கள்

அர்ச். டெலாசால் அருளப்பரின் தலைமையில் முத்திப்பேறுபெற்ற பெனில்டஸ் சந்நியாசசகோதரரே (Christain Brothers) கிறிஸ்துவசகோதரர்சபையை உண்டுபண்ணினர்.

இவருக்குச் சிறுவயதில் பீற்றர்ரெுபின்சன்எனப் பெயரிட்டனர். இவர்தற்போது இலங்கையில் அதிக பள்ளிக்கூடங்களில்படிப்பித்துவரும் கிறீஸ்துவசகோதரரின் முதலாவது சகோதரர் எனலாம்.

இவர்கள் குருக்களைப்போலல்லாமல், பள்ளிக்கூடத்தில் படிப்பிப்பதே இவர்களது பிரதான வேலையாகும். முதல்முறையாகச் இச்சபை 1680-ம்ஆண்டு பிரான்ஸ் தேசத்தில் கல்வியூட்டும்சபையாக இருந்தது.

இச்சபை அந்நாள் ஆண்டுவந்த 13-ம்ஆசீர்வாதப்பர் என்றபாப்பானவரால் உயர்நிலையில் ஏற்படுத்தப்பட்டது. அந்நாள் பிரான்சில்நிலவிய இருளையும், அஞ்ஞானத்தையும் நீக்கிவறுமையுற்றவர்களுக்குப் படிப்பைக்கொடுக்க அர்ச். யோண்பப்ரீஸ் பிரயாசப்பட்டார்.

சிலவருடங்களில் இச்சபை உலகம்எங்கும்பரவி அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியாக் கண்டங்களில் ஓங்கிவளருகின்றது.

தற்போது, 65 மாகாணங்களில் 15,000 சந்நியாசிகள் 1,300 பள்ளிக்கூடங்களை நடத்திவருகின்றனர். படித்துவரும்மாணவர்தொகை 3,50,000ஆகும்.

இலங்கையில் ஒன்பது பள்ளிக்கூடங்களில், 70 சந்நியாசிமார்கள் 7,200பிள்ளைகளைப் படிப்பிக்கின்றனர். இன்னும்அதிகமான சகோதரர்கள் இருந்தால், இன்னும்பள்ளிக்கூடங்களை எடுத்துநடத்தலாம். ஆகவே, கதிர்களோநிறைய, அறுவடைக்காரருக்காக எசமானைப் பிரார்த்தியுங்கள்.

—'றெக்ஸ்' இராசையா

—*—

## கர்த்தரைக்கண்ட பாலன்

அநேக விசாரணைப் பங்குகளில் இப்பொழுது சிறுவர்கள் முதல் நன்மை உட்கொள்ள ஆயத்தஞ் செய்கிறார்கள். அவர்களுக்காக இச் சிறு சரித்திரத்தைத் தருகிறோம்.

பாஸ்கால், தூய ஆவியின் ஆகமனத் திருநாளன்று பிறந்தார். இத் திருநாளை ஸ்பானியர் தூய ஆவியின் பாஸ்கா என அழைப்பர். ஆகவே, அவருக்கு அப்பெயர் கொடுக்கப்பட்டது.

பாஸ்காலுடைய பெற்றோர் வறியவர்கள். ஆயினும், தேவஅன்பு நிறைந்தவர்கள். தங்கள் பிள்ளைக்கும் அதை ஊட்டினர். பாஸ்கால் முதற்கூறிய மழலைமொழிகள் யேசு, மரி. அவருடைய தாய் அவரைப் பூசைக்கு அழைத்துச்செல்வாள். சிறுவனாயிருந்தாலும் நற்கருணைப் பேழையை இமைகொட்டாமற் பார்த்துக்கொண்டிருப்பார். பூசையில் நற்கருணை எழுந்தேற்ற வேளையில் பாஸ்கால் ஆனந்தம் பூத்திருக்கக் காண்பாள் அவர் தாய்

ஒருநாள் பாஸ்காலை வீட்டிற் காணவில்லை. குடுகுடுப்பைக்காரர் தூக்கிக் கொண்டுபோய் விட்டார்களோ என அவருடைய பெற்றோர் பயந்தனர். அவருக்காகச் செபிக்கக் கோயிலுக்குச்சென்றனர். அங்கு பீடத்துப்படிகளில் பாஸ்கால் ஏறிக் கொண்டிருக்கக் கண்டனர்.

பாஸ்காலுக்கு வயதுஏழு. தந்தையிடமிருந்த ஆடுகளை மேய்க்கும் வேலைக்கு அனுப்பப்பெற்றார். அவ் வேலையில் அவருக்கு விருப்பம் அதிகம். ஏனெனில், செபிக்க அதிக நேரங் கிடைக்கும். இடையக் கோலையுங் கொண்டுபோவார். அதில் தேவதாயின் சுரூபம் ஒன்றைக் கட்டிவைத்திருந்தார். கோலை நிலத்தில் ஊன்றிவிட்டு, அதைத் தன் கோயில் என எண்ணிச் செபிப்பார்.

(அடுத்தபக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடு மேய்க்க வேறு பிள்ளைகளும் வருவார்கள். அவர்கள் பாஸ்காலைப் போல் நற்குண, நல்லொழுக்கம் உள்ளவர்கள் அல்ல. அவர்கள் ஊத்தைப் பேச்சும் பேசுவார்கள். ஆனால், அவர்கள் எல்லோருக்கும் பாஸ்கால்மட்டில் அபார அன்பு. அவர் முன்னிலையில் கெட்ட பேச்சுப் பேசத் துணியமாட்டார்கள். அவர்களுக்கு அவர் தேவதாயுடையவும், அர்ச்சியசிட்டர்களுடையவும் கதைகள், புதுமைகள் சொல்லுவதை அவதானமாய்க் கேட்பர். அவர்கள் அவரைப் "பாஸ்கால் விறதர்" என அழைப்பர். அவருடைய சகோதரி ஜேன் அவருக்குச் "சின்னத்துறவி" எனப் பெயரிட்டாள்.

அன்றொருநாள் பாஸ்கால் ஆடு மேய்க்கச் சென்றபொழுது பூசை காண ஆவல்கொண்டார். தூரத்திலிருந்த ஆலயம் ஒன்று அவர் கண்ணிற்பட்டது. அவ்வாலயத்தை நோக்கிமுழந்தாட்பணிந்தார். "யேசுவே! ஆராதனைக்குரிய என் ஆண்டவரே! உம்மைக் காண நான் ஆவலாயிருக்கிறேன்" என வேண்டிக்கொண்டார். சடுதியாய் அந்தரத்தில் ஒரு வெளிச்சம் தோன்றி மறைந்தது. பூசைப் பாத்திரத்தையும், அதன்மேல் வெண்ணிறப் பலி அப்பத்தையும், தூதர்கள் அதைச் சூழ்ந்து ஆராதிக்கிறதையுங் கண்டார் பாஸ்கால். உடனே முழந்தாளிட்டு ஆராதித்தார். தாம் கண்டதைத் தோழருக்கு அறிவித்துச் சற்பிரசாத நாதரை ஆராதிக்கும்படி கூறினர். அவர்கள் அக்காட்சியைக் கண்டார்களில்லை. பாஸ்காலின் சொல்லை நம்பி அவர் கூறியபடி செய்தனர்.

பாஸ்கால் பிரான்சிஸ்கன் சபைத் துறவியானர். மடத்தில் அவருடைய நற்கருணைப்பக்தி மேலும் வளர்ந்தது. நற்கருணைநாதரை நேசிப்பவர்கள் அவரைப்போல் ஆவரன்றோ. தூய ஆவியானவரின் திருநாளில் பிறந்தவர், அதே தினத்தில் ஐம்பத்திரண்டு ஆண்டுகளின் பின்னர் பூசையில் எழுந்தேற்றமணி அடிக்கும்வேளை யேசுநாதர் பாஸ்காலைப் பரகதிக்கு அழைத்துக்கொண்டார்.

அவரது திருமேனி மடத்துச் சிற்றாலயத்தில் வளர்த்தப்பெற்றது. அடுத்தநாள் பூசைவேளை நற்கருணை எழுந்தேற்றஞ் செய்யும்நேரம் பாஸ்கால் பிரேதப் பெட்டியிலிருந்து எழுந்து அன்புடன் நற்கருணையைக் கண்கொண்டுநோக்கி, பின் நித்தியமாய்க் கண்களை மூடினர். மரணத்திலும் நற்கருணையேசுவை ஆராதனைசெய்தார் பாஸ்கால்.

அர்ச். பாஸ்காலுடைய திருநாள் வைகாசி 17-ந் திகதி. அவரைப் போன்று நீங்களும் நற்கருணையை அதிகமதிகம் நேசிக்க உதவியைக் கேளுங்கள். நீங்கள் உண்மையாய் அன்புகொள்ள விரும்பினுல் அடிக்கடி — ஏன் நாள்தோறும் நற்கருணை உட்கொண்டுவாருங்கள்.


## Educational (Girls Only)

For Commercial Certificate and Shorthand Typists Examinations contact

**M. M. Thuraisingham.**

20, Third Cross Street,
Jaffna.



உலகிலே உன்னத ஸ்தானத்தில் திகழும்

**எறஸ் றேடியோ**

ஒன்றை வாங்கித் திருப்தியடையுங்கள்!

ஏனெனில், அது முற்றிலும் புதுமையானது. ஒவ்வொரு 'எறஸ்' றேடியோவும் திறமையான சேவையாளரால் உருவாக்கப்பட்டது. அதன் நீண்டகால சேவையே அதன் வெற்றிக்கு ஆதாரம்.

இதன் விசேஷ அம்சங்கள்:

- கவர்ச்சிகரமான தோற்றம்
- இனிமையான சத்தம்
- உறுதியான அமைப்பு
- டச் தயாரிப்பு

விற்பனையாகும் றேடியோக்கள் யாவும் உத்தரவாதம் உடையன.

உங்கள் றேடியோப் பிரச்சினை எதுவாயிருப்பினும் றேடியோத் துறையில் பலவருடகால அனுபவம் வாய்ந்தவரான திரு. எஸ். ஜே. மனுவல்பிள்ளை அவர்களுடன் கலந்துகொள்ளுங்கள்.

விற்பனையாளர்:

**எஸ். ஜே மனுவல்பிள்ளை,**
**றேடியோ சேல் அன் சேர்விஸ்**
**6, மருதடிறேட், சுண்டிக்குளி,**
**யாழ்ப்பாணம்.**


## பக்தியின் பயிற்சிப் பாட...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

லாகும். இவ்வறிவின்மீது முளைத்தெழுவது இரட்சணியவாஞ்சையும், அதன்விளைவாய ஓர்வித ஞானவேட்கையும். இத்தெல்லுத்தான் களிகூர்ந்த இரகசியங்களாற் குறிக்கப்படும். தேவவார்த்தை மாமிசமாகி மோட்சபாதையைத்திறந்து செப்பமிட்ட சுபமங்கள செய்தியைக் குறிப்பிடுவது களிகூர்ந்த இரகசியங்கள்.

பாவத்தின் பாசபந்தனங்களினின்று விடுபடுதற்கு வேண்டியஎத்தனங்களைத் தேடிப்பிரயோகித்தலே இரண்டாவது தெல்லின் நிகழ்ச்சியாம். இம்முயற்சிநிரை பெரும்பாலும் கஷ்டமானதேயாயினும் பேரின்பசம்பாத்தியத்திற்கு இன்றியமையாத ஒன்றும். துயராசார இரகசியங்களின் சிந்தாகுலங்களில்மூழ்கியெழுவதே இவ்விரண்டாம் தெல்லில நடைபெறுவது.

நித்தியவாழ்வைச் சுவீகரித்துச் சுதந்தரஆட்சியில் ஆனந்தமாய் அயர்ந்திருத்தலே கடைசித்தெல்லாகும். முடிவுபூகனையின்றிப் போகப்போக நீடிக்கும் இத்தெல்லுக்கு எல்லையேயில்லை. இப்பேரின்பவாழ்வின் பரமானந்தத்தைப் பட்டதும்படாததுமாய் ஒருசிறிது முன்சுவைக்கத் தருதலே மகிமைப்பரம இரகசியதியானத்தின் பெருமையாகும்.

இந்தநியாயங்களையிட்டுத்தான் திருச்செபமாலை இலகுவிற் சாதிக்கக்கூடிய காரியானுகூல செபங்களுளெல்லாம் தலைசிறந்தது என்கிறோம்.

மட்டுக்கடந்த மானிடவேட்கைகளின் மத்தியிலிருந்து இது நம்மை இட்டுக்கொண்டுபோய் இரட்சாபெருமானின் வரவைச்சார்ந்த நற்சிந்தனைகளில் ஈடுபடச்செய்கின்றது. அர்த்தமற்ற பயப்பீதிகளில்நின்றும், முகங்கோணுது நன்மனதாய் வரவேற்காத சுகதுக்கங்களில்நின்றும் அதுநம்மைக் காப்பாற்றுகின்றது. நமது நேசத்தின்பொருட்டு யேசுநேசர் எக்கொடிய அவதிகள் அனுபவித்தார்என்பதை ஞாபகப்படுத்தித் தேவதிருவுளம் நமக்கென நியமனஞ்செய்த துன்பதுரிதங்களை எங்ஙனம்பயன்படுத்தி எம்மைச் சுத்திகரித்துப் புனிதராக்கலாமென்று கற்றுக்கொடுக்கின்றது. எமதுலௌகிக இலட்சியங்கள், கோரிக்கைகளினின்று எம்மை ஈர்த்தெடுத்து மெய்யான கிறீஸ்துவ குறிக்கோள்களாகிய நீடூழிப் பரமானந்தவாழ்வையும், அதைஅடைவதற்கு அத்தியாவசியகமான வரப்பிரசாதடேட்டத்தையும் நினைவுகூரச்செய்கின்றது.

(வரும்)

## அர்ச். சூசையப்பர்பந்தி

யாழ்ப்பாணம், சென் வின்சென்ற் டி போல்சபை அர்ச். சூசையப்பர்பந்தியின் வருடாந்தபொதுக்கூட்டம் இம்மாசம் 25-ந்தேதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிறமை பிற்பகல் 5-30 மணிக்குச் சென் சாள்ஸ்பாடசாலைமண்டபத்திலே வண. எம். ஜே. மரியாம்பிள்ளை சுவாமியவர்கள் தலைமையில் நடந்தேறும். அதிலே பலாலி, ஆசிரியர் கல்லூரிப்பேராசிரியர் திரு. பி. எம். வேதநாயகம்பிள்ளை அவர்களும், வேறுசிலரும் சொற்பொழிவாற்றுவார்கள். பந்தியின் அபிமானிகளும், உபகாரிகளும் அதற்குச் சமுகமாகும்படியாய்க் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 31-ந்தேதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். கூட்டத்தின்பின் பகுதித்தலைவர்சள்சங்கம் நடைபெறும். தயவுசெய்து எல்லோரும் நேரகாலத்தோடு சமுகங்கொடுக்குமாறு வேண்டுகின்றேன்.

A. S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக

## நன்றியறிந்த தோத்திரம்

சென்ற 1957-ம்ஆண்டு மார்கழிமாசம் 25-ந்திகதி அடித்த மழையும், புயலும் பிரசண்டமாயிருந்ததினல் அன்றுஇரவும், 26-ந்திகதி பகலும் நான் விடாப்பிடியாய் அர்ச். அந்தோனியாரிடம் கேட்டமன்றாட்டுக்கு அவர்இரங்கி, மழையும், புயலும்அமர்ந்ததினல் 27-ந்திகதி வந்த வெள்ளத்துக்கு உயிர்ச்சேதமில்லாது காப்பாற்றப்பட்டோம். நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

நெடுங்கண்டல் கபிரிகேல், வயித்தியம்

● பரிசுத்தபாப்பரசரது சகோதரரின்புதல்வரான கார்லோ பச்செல்லி இளவரசரைத் தலைமையாகக்கொண்டு சுமார் 750. இத்தாலிய யாத்திரிகர்கள் அன்றுசனிக்கிழமை புகையிரதமார்க்கமாக லூர்துபதிபோய்ச் சேரலானுர்கள்.

● அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த "லொக்ஹீட்" என்ற ஜெற் போர்விமானமொன்று சென்றசனிக்கிழமை இதற்குமுன் எந்த விமானமும் பறந்துசெல்லாத அத்துணைதீவிரமாக மணித்தியாலம் 1404·19 மைல்வேகத்தில்பறந்து உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. இதற்குமுன் விமானமொன்று அதிகம்வேகமாக மணித்தியாலம் 1207·6 மைலேபறந்துசெல்லலாயிற்று.

## சிங்களமய பஸ்கள்

இலங்கைப் போக்குவரத்துச்சபை சிங்களஎழுத்துகளைப் பஸ்கள்மூலம் மற்றோர்புதியமுறையிலே யாழ்ப்பாணத்தில் புகுத்தியிருக்கிறது. சமீபத்திலே தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்டபஸ்கள் எல்லாவற்றிலும் சிங்களமொழியிலேயே பிரயாணிகளின் அவதானக்குறிப்புகள்காணப்படுகின்றன. அவைகள் தமிழிலோ அன்றேல் ஆங்கிலத்திலோ எழுதப்படவில்லை. பெயர்ப்பலகைகளிலுள்ள ஊர்ப்பெயர்களைத்தவிர ஏனையவைகளெல்லாம் சிங்களத்தில்மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதனுல் பொதுமக்கள் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளார்கள்.

## பாலம்இடிந்து இருவர்மரணம்

ஜாயெலையிலே ஐந்து லட்சம்ரூபா செலவில் அமைக்கப்பட்டுவந்தகொங்கிறீற்பாலத்தின் ஒருபகுதி சென்றசனிக்கிழமை அடித்துக்கொண்டு விழுந்துவிட்டது. 160 தொன்நிறையுள்ள உருக்கும், கொங்கிறீற்சிமெந்தும் இடிந்துவிழுந்தமையால் இருவர்உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார். அன்றுதான் இந்தப்பாலம்கட்டி முடிக்கப்படவேண்டிய நாளாகும். பாலத்தில் கட்டப்பட்டிருந்த தென்னமரத்தூண்கள் அழுகியதால் அவைகள் நொருங்கிவிழுந்தன. மூவரும் பாலத்திற்கடியில் முறுக்காணிகளை இறுக்கிக்கொண்டிருக்கும்போதுதான் இந்தத் தூண்கள்முறிந்து பாலம்அவர்கள்மீது விழலாயிற்று. இவர்களில் ஒருவரான அல்விஸ் ஆஸ்பத்திரியில் மரணமடைந்தார். வின்சென்ற் பாலத்துக்கடியில் அகப்பட்டு மரணமானுர். இவரின்பிரேதத்தைக் கண்டெடுக்க 20அடித்தண்ணீரில் நீச்சல்வீரர்கள்முயன்றும் அது கண்ணுக்குத் தென்படவில்லை. எட்வின் படுகாயமடைந்தார்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

கிறீஸ்துஇராசா, சதாசகாயமாதா (பத்திமாமாதா), சஞ்சூசையப்பர், அர்ச். பிலிப்புநேரியார், அர்ச். அந்தோனியார், அர்ச். தீத்தம்மாள்ஆகிய இவர்களிடம் கேட்டமன்றாட்டுபூர்த்தியாயிற்று. நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன். இவர்கள் நாமம் என்றும் புகழப்படுவதாக.

இளவாலை சி. பி. செல்வராசா

* * *

அனந்ததயாபரகடவுளின் கடாட்சத்தாலும், அர்ச். சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார்மற்றும்சுத்தவாளர்களின் இடைவிடாதவேண்டுதலினுலும், கடந்த சிலவருடங்களாக எனக்குஇருந்துவந்த வீண்பணச்செலவு, கந்தோர்சம்பந்தமான தொந்தரவுகள், மனதைக்குழப்பிக்கொண்டிருந்த சில விஷயங்கள், வீடுவாசல், பொருள்பண்டம் சம்பந்தமான கவலைகள்யாவும்நீங்கி நல்மனச்சந்தோஷத்துடனும், மனநிம்மதியுடனும்இருந்து வருகிறேன். அத்துடன் அவர்கள்மேல் கொண்டுள்ளநம்பிக்கையானது, நாங்கள் பலநாட்களாக ஆசித்துவரும் மிகவும்முக்கியபாக்கியமாகிய புத்திரபாக்கியத்தையும், நல்லசரீரசுகத்தையும் அடையச்செய்யுமென்ற பூரண நம்பிக்கையுடன் நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கின்றேன்.

பண்டத்தரிப்பு செல்வம்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 22-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org